JESUS REDEEMS MINISTRIES

# வாலிபர் உலகம்

மலர் 14 | இதழ் 03 | மே 2023 | ஆண்டு சந்தா ₹ 100




# தாமதம் செய்யார்!

# வாலிபர் உலகம்

## உள்ளே...


4



கிருபை மேல் கிருபை...

12



முழு இருதயத்தோடு கர்த்தரை தேடுங்கள்!

28



நிபந்தனைகளும் வாக்குத்தத்தங்களும்

32



Coffee with பத்திரிக்கையாளர்


இளம் நெஞ்சங்களின் மனதில் வேதத்தின் விளக்கேற்றி, சிந்திக்க வழிகாட்டி, சீஷனாய் மாற்றி, அவர்களை உலகத்திற்கு வெளிச்சமாய் மாற்றுவதே இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் உன்னத நோக்கமாகும். விசுவாச இளைஞர்கள் அவனியெங்கும் உருவாக, அவர்களுக்கென்றே மாதந்தோறும் வெளிவரும் பூங்கொத்து இது!

மார்ச் மாதம் வாலிபர் உலகம் பத்திரிக்கையில் Getsy clarwin அக்காவின் சாட்சி என்னை தொட்டது. மேலும், தீபா மாலிக் அவர்களும் Spinal cordல் பிரச்சினை இருப்பினும் சாதித்தார்கள். பெலவீனம் மற்றும் எதிர்காலத்தை குறித்த பயம் இருந்த எனக்கு மார்ச் மாத வாலிபர் உலகம் பத்திரிக்கை ஆசீர்வாதமாக இருந்தது. - யஸ்பி, தேனி

நான் சரியாக ஜெபிக்க முடியவில்லையே என்று வருத்தத்துடன் இருந்தேன். அப்பொழுது வாலிபர் உலகம் பத்திரிக்கையில் நிலைத்திரு மற்றும் சுத்த இருதயத்தோடு கர்த்தரை தேடு என்ற 2 கட்டுரையும் என்னோடு பேசினது. அதில் இருந்தபடியே நான் ஒப்புகொடுத்து ஜெபித்தபொழுது எனக்குள் மிகுந்த சந்தோசம் மற்றும் சமாதானம் வந்தது. என் சோர்வை மாற்றிய தேவனுக்கும் மற்றும் இயேசு விடுவிக்கிறார் உழியத்திற்கும் நன்றி - சாம், கடலூர்

COMMENT

இப்பத்திரிக்கையைக் குறித்ததான உங்களது கருத்துக்கள், உங்களுக்கு பிரயோஜனமாயிருந்த கட்டுரைகள் மற்றும் நீங்கள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களை, உங்கள் பெயர் மற்றும் ஊருடன் sms மூலமாகவோ, whatsapp மூலமாகவோ 9750955547 என்ற எண்ணுக்கு எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்.

JESUS REDEEMS MINISTRIES

**இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,** நாலுமாவடி, தூத்துக்குடி - 628 211.

Phone: 04639-353333 | Cell:9750955547

youth@jesusredeems.org | www.jesusredeems.com | youth.jesusredeems.com

ஆசிரியர்: மோகன் சி. லாசரஸ் இணை ஆசிரியர்: அவினாஷ் ஆசிரியர் குழு: வயலா | ஜெயசீலன் | ரவி | வில்லியம் ரேச்சல் | கிளாடிஸ் | சுமா | கெத்சி கிளார்வின் | சதீஷ் | காலேப் | பெனிட்டா | ஜெயா | ஜாய்லின் ஜான்

வடிவமைப்பு: டேவிட்சன்

தலைவாசல்

# கர்த்தர் தாமதிப்பதில்லை!



அன்பான இளம் நெஞ்சங்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்!

நம்முடைய வாழ்க்கையில் அத்தனை காரியங்களும் தாமதமின்றி நடக்க வேண்டும் என்று நாம் விரும்புவோம். பல நேரம் ஒரு நன்மை பெற, ஒரு ஆசீர்வாதத்தைப் பெற நாம் காத்திருப்பது மிகவும் அவசியம். இன்றைய இணைய உலகத்தில் எல்லாமே வேகமாகவும், விரைவாகவும் கிடைக்கின்ற பட்சத்தில் தாமதம் என்பது தவறான செயலாகவே எல்லோருக்கும் தோன்றுகிறது. அவர் வாக்குக்கொடுத்துள்ளார் நிச்சயம் செய்வார், தாமதம் செய்யார். அநேக நேரம் ஆசீர்வாதத்தையும், அற்புதத்தையும் பெறுவதற்கு நாம் ஒரு காலத்தையும், நேரத்தையும் முன்குறித்து காத்திருப்போம். ஆனால் அந்த அற்புதத்தையும், ஆசீர்வாதத்தையும் பெறுவதற்கு நாம் தேவனுடைய காலத்திற்கும் நேரத்திற்கும் காத்திருக்க வேண்டும். நம்முடைய காத்திருப்பு நேரம் முடிந்ததும், நடக்கவில்லையே என்று சோர்ந்து போய், துவண்டும் போகிறோம்.



யோசேப்பு தரிசனம் கண்டது 17 வயதில். ஆனால் கண்ட தரிசனம் நிறைவேற கர்த்தர் குறித்தது 13 வருடங்கள். யோசேப்பு பார்வோனுக்கு முன்பாக நின்ற போது 30 வயதாயிருந்தான். யோசேப்பு தான் குறித்த நாளில் அதிபதியாகவில்லை, ஆனால் தேவன் குறித்த நாளில் அதிபதியானான்.

கர்த்தர் ஆபிரகாமை ஆசீர்வதிப்பேன், பெரிய ஜாதியாக்குவேன் என்று சொன்ன போது 75 வயதாயிருந்தான். ஆனால் ஈசாக்கை 100 வயதில் தான் பெற்றெடுத்தான். 25 ஆண்டுகள் தாமதம் அல்ல, அந்த ஆசீர்வாதம் பரிபூரணமாவதற்கு காத்திருந்த ஆண்டுகள்.



இன்றைக்கும் தேவன் உங்களுக்கு பல வாக்குத்தத்தங்களை, ஆசீர்வாதங்களைக் கொடுத்திருக்கலாம். அவை நிச்சயம் நிறைவேறி உங்கள் கைகளில் வந்து சேரும். காரணம், அது தேவனுடைய வார்த்தை என்பதால் கட்டாயம் ஆண்டவர் நிறைவேற்றுவார். ஆனால் அந்த ஆசீர்வாதத்தின் காலமும் நேரமும் உங்களுடைய நேரத்திற்கு ஏற்றபடி அல்ல, தேவனுடைய நேரத்திலும், நாழிகையிலும் நிச்சயம் நிறைவேறும்.

எனவே தாமதம் என்பது நம்முடைய நினைவிலும், எண்ணத்திலும் தான் இருக்கிறது, தேவனுக்கு அது பொருந்தாது, தாமதம் என்பது தேவனுக்கு தெரியாது, அவருடைய செயலிலும் அது கிடையாது. எல்லாவற்றையும் அதினதின் காலத்தில் நேர்த்தியாய் செய்கிறவர் நம் ஆண்டவர்.



எனவே வாலிபனே, உன்னுடைய வாழ்விலும் அவருடைய சித்தமும் விருப்பமும், அவருடைய நேரத்திலும் நாழிகையிலும் நிச்சயம் நிறைவேறும்.

"காத்திரு! பொறுத்திரு! கர்த்தரையே நம்பியிரு"
தாமதமின்றி நிறைவேற்றுவார்!
அவர் தாமதம் செய்யார்!

கிறிஸ்துவின் பணியில்
அவினாஷ்

# கிருபை மேல் கிருபை...

சாட்சி தொகுப்பு: ஜாய்லின் ஜான்

## சாமுவேல் ஐசக்



அன்பிற்குரிய வாலிப நெஞ்சங்களுக்கு, இரட்சகராகிய இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். ஒவ்வொரு மாதமும் இந்த வாலிபர் உலகம் பத்திரிக்கையின் வாயிலாக அநேகரின் சாட்சிகளை வாசிப்பதன் மூலம் உங்கள் விசுவாசம் பெலப்படுவதோடு நீங்கள் இன்னும் ஆண்டவருக்காக வைராக்கியமாக எழும்பிக் கொண்டிருக்கிறீர்கள் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். இந்த மாதமும், ஒரு உயிருள்ள சாட்சியை உங்களுக்கு வழங்க ஆவலாக உள்ளோம்.

கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து, கர்த்தருக்கு பயப்படும் பயத்தில் வளர்க்கப்பட்டு, ஆண்டவரிடமிருந்து எண்ணற்ற உயர்வுகளையும் ஆசீர்வாதங்களையும் பெற்று, கல்லூரி நாட்களில் பெருமைக்கு இடங்கொடுத்து, சற்று வழிவிலகினாலும் மனந்திரும்பி ஆண்டவருக்காக அர்ப்பணிப்புடன் வாழும் ஒரு சகோதரரின் வாழ்க்கை அனுபவங்களைப் பற்றி அவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்வோம் வாருங்கள்.

**உங்களைப் பற்றியும் உங்கள் குடும்பத்தைப் பற்றியும் கூறுங்களேன்...**

என் பெயர் சாமுவேல் ஐசக். எனது தகப்பனார் பெயர் அந்தோனிராஜ். அம்மா, அப்பா, தம்பி, தங்கை என எங்கள் குடும்பத்தில் நாங்கள் 5 பேர். எனது தகப்பனார் திருமண்டல சிறுவர் ஊழியத்தில் ஊழியம் செய்து வருகிறார். எனது அம்மாவும், அப்பாவுடன் இணைந்து ஊழியம் செய்கிறார்கள். ஊழியக்காரர் குடும்பம் என்பதினால் மிகவும் பயபக்தியுடன் வளர்க்கப்பட்டேன். தினமும் ஜெபிப்பது, வேதம் வாசிப்பது என்று தேவனுக்கு பிரியமான அனைத்துக் காரியங்களையும் சிறுவயது முதல் செய்து வந்தேன். நான் தொடக்கக் கல்வியை தமிழ் வழி கல்வியில் படித்தேன்.

**உங்களது பள்ளி வாழ்க்கையைப் பற்றி சற்று கூறுங்களேன்...**

நான் ஐந்தாம் வகுப்பில் 500க்கு 500 மதிப்பெண் பெற்றேன். நான் நன்றாக படிப்பதை அறிந்து, ஆசிரியர்கள் எனது தந்தையிடம் ஆங்கில வழி கல்வி கற்க அறிவுறுத்தினர். அதன்படி நான் 6ம் வகுப்பு முதல் மர்காஷியஸ் மேல்நிலை பள்ளியில் ஆங்கில வழி கல்வி பயின்றேன். அதுவரை தமிழில் படித்ததினால் ஆங்கிலம் எளிதில் புரியவில்லை. சற்று கஷ்டப்பட்டு படித்தேன்.

அதுவரை அனைத்து பாடங்களிலும் சிறந்து விளங்கிய நான், முதன்முறையாக 6ம் வகுப்பு முதல் தேர்வில் தோல்வியுற்றேன். அதை என்னால் சற்றும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இதற்கு முன் படித்த பள்ளியில் நன்கு படிக்கிற மாணவனாக இருந்த என்னால் இந்தத் தோல்வியை ஏற்க முடியவில்லை. வகுப்பில் இருக்கும் 50 மாணவர்களில் நானும் ஒரு மாணவனாக இருந்தேன். பல ஆசிரியர்களுக்கு சாமுவேல் ஐசக் என்கிற ஒரு மாணவன் இருக்கிறான் என்பது கூட தெரியாது.








உலகம் என்னை நினையாமல் இருந்தாலும் என் பரம தந்தை என்னை நினையாமல் இருக்கவில்லை.

அந்த தேர்வு நாட்களிலும் தேவன் கூடவே இருந்து வழிநடத்தினார்.

**அடடா... ஆங்கில வழி கல்விக்கு மாறியதால் மிகவும் தடுமாறிய உங்களுக்கு யாரேனும் உதவினார்களா?**

ஆம், மிகவும் தத்தளித்துக் கொண்டிருந்த எனக்கு என் தந்தை கொடுத்த ஆலோசனை மிகவும் உதவியது. தினமும் பாடங்களைப் படிக்கும் முன் வேதம் வாசித்து, ஜெபம் செய்வது எனது பழக்கமாக இருந்தது. அதனோடு சேர்த்து ஆங்கில வேதாகமம் வாசிக்க எனது தந்தை ஆலோசனை கொடுத்தார்கள். அதுமட்டுமல்லாமல் Dictionary ஒன்று வாங்கிக் கொடுத்து, தெரியாத வார்த்தைகளுக்கு அர்த்தம் கண்டுபிடித்து படிக்கவும் வழிகாட்டினார்கள். தந்தையின் ஆலோசனையைப் பின்பற்றி படிக்க ஆரம்பித்த பின்பு படிப்பில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டது. இந்த நிலையில் அரசாங்க தேர்விற்கு ஒரு மாதத்திற்கு முன்பு நான் கால்பந்து விளையாடும் போது கீழே விழுந்ததினால் கையில் உள்ள எலும்பு உடைந்தது. அந்த நேரத்திலும் தேவன் என்னை பெலப்படுத்தினார். தேர்வு எழுத ஆரம்பித்த சிறிது நேரத்தில் எனது கையில் வலி ஏற்பட ஆரம்பித்துவிடும். சிறிது ஓய்வு எடுத்தபின் தேர்வினை எழுதுவேன்.

**சரி, சிறுவயதிலிருந்தே கிறிஸ்துவுக்குள் வளர்க்கப்பட்ட நீங்கள் எப்பொழுது இரட்சிக்கப்பட்டீர்கள்?**

எனது 8ம் வகுப்பில் பாலியர் நண்பன் கூடுகையில் இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்றுக் கொண்டேன். தினமும் ஆலயத்திற்கு சென்று ஜெபிப்பதையும் நான் நிறுத்தவில்லை. 11, 12ம் வகுப்புகளில் இயேசு விடுவிக்கிறார் மூலம் நடைபெற்ற Achievers கூடுகையில் கலந்து கொண்டேன். எனது 12ம் வகுப்பு படிக்கும் போதே, இயேசு விடுவிக்கிறார் வாலிபர் பிரிவில் தன்னார்வ ஊழியராகவும் இணைந்து ஊழியம் செய்ய ஆரம்பித்தேன். ஆகையால் ஜெப வாழ்க்கையில் என்னால் இன்னும் அதிகமாக வளர முடிந்தது.

**உங்கள் புதிய பள்ளியின் அனுபவம் எப்படி இருந்தது?**

வகுப்பில் முதல் 5 பேரில் ஒருவனாக இருந்த போதிலும் ஆசிரியர்களின் அங்கீகாரம் இல்லாமலேயே இருந்தது. 10ம் வகுப்பு படிக்கும் போது நன்றாக படிக்கும் மாணவர்களுக்கு, இன்னும் அதிக மதிப்பெண்கள் எடுப்பதற்காக கொடுக்கப்படும் பயிற்சி வகுப்பில் கூட நான் சேர்த்து கொள்ளப்படவில்லை. உலகம் என்னை நினையாமல் இருந்தாலும் என் பரம தந்தை என்னை நினையாமல் இருக்கவில்லை. அனைவரும் ஆச்சரியப்படும் விதமாக 200க்கும் மேற்பட்டோர் படிக்கும் பள்ளியில், நான் இரண்டாம் மதிப்பெண் பெற்றிருந்தேன். முதல் மதிப்பெண்ணிற்கும் எனக்கும் ஒரே ஒரு மதிப்பெண் தான் வித்தியாசம். அதுவரை நான் உதாசீனப்படுத்தப்பட்ட இடத்திலெல்லாம் அதன் பிறகு மரியாதை கிடைத்தது. பல இடங்களில் என்னை சாட்சியாக நிறுத்தினார்.

**சபாஷ்... அற்பமாக எண்ணப்பட்ட இடத்தில் ஆண்டவர் பெரும் வெற்றியை தந்து உங்கள் தலையை உயர்த்தினார். அடுத்தடுத்த வகுப்புகளில் எப்படி படித்தீர்கள்? இதைப் போலவே நல்ல மதிப்பெண்கள் பெற்றீர்களா?**

அதே பள்ளியில் படிப்பைத் தொடர்ந்தேன். 12ம் வகுப்பு அரசாங்க தேர்வுக்கு தயாராகும் போது ஒரு பெரிய போராட்டம் வந்தது. அரசாங்க நடைமுறை தேர்விற்கு ஒரு வாரத்திற்கு முன்பு எனது அப்பா நெஞ்சு வலியால் பாதிக்கப்பட்டு திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்கள். அதுவரை தந்தையின் அரவணைப்பில் ஆலோசனையில் வாழ்ந்த எனக்கு, தந்தை தீவிர சிகிச்சை பிரிவில் இருக்கும் போது என்ன செய்வதென்று தெரியவில்லை. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அந்த முதல் சில நிமிடங்கள் என்ன செய்ய வேண்டும், யாரிடம் பேச வேண்டும் என்று தெரியாமல் கதி கலங்கி நின்றேன். அந்தச் சூழலில், பரிகாரியாகிய தேவன் என்னோடும் தந்தையோடும் இருந்தார். ஆச்சரியப்படும் விதமாக ஒரு வாரத்திற்குள் சாதாரண பிரிவிற்கு எனது தந்தை மாற்றப்பட்டார்கள். ஒரு வாரத்திற்குபின், நான் செய்முறை தேர்விற்காக தான் பள்ளிக்கு சென்றேன். அந்த தேர்வு நாட்களிலும் தேவன் கூடவே இருந்து வழிநடத்தினார். 12ம் வகுப்பு அரசாங்க தேர்வில் தேவன் எனக்கு பள்ளியில் 3ம் மதிப்பெண் கொடுத்து உயர்த்தினார்.

**அல்லேலூயா! வெற்றியின் மேல் வெற்றி! கல்லூரி வாழ்க்கை எப்படி இருந்தது?**

அதன்பின் கல்லூரியில் என்ன படிக்க வேண்டும் என தெரியவில்லை. நன்றாக ஜெபித்து தேவனின் திட்டத்தின்படி நாசரேத்தில் உள்ள மார்காஷியஸ் கலை கல்லூரியில் கணிதம் பயில ஆரம்பித்தேன். நாம் நமது வாழ்க்கையை இயேசுவின் கையில் கொடுக்கும் போது தான் வாழ்க்கையின் மிகப்பெரிய ஆசீர்வாதங்களைப் பெற முடியும். ஏனெனில் இந்தக் கல்லூரி நாட்களில் தான் நான் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டேன். மேலும் UG மற்றும் PG படிப்பில் முதல் வகுப்பில் தேர்ச்சிப் பெற்றேன். கல்லூரியின் Chairman ஆகவும், கலெக்டர் அலுவலகத்திற்கு Ambassador ஆகவும் இருந்தேன். மேலும் கல்லூரி கால்பந்து அணியின் தலைவனாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டேன்.

**வேற லெவல் போங்க! இயேசப்பாவின் துணையால் இவ்வளவு உயர்வுகள், அடுத்தடுத்து படித்துக் கொண்டே இருப்பீர்கள் போல் உள்ளதே... தொடர்ந்து மேற்படிப்பு படித்தீர்களா?**

இப்படி அனைத்தும் நன்றாக சென்றுக் கொண்டிருந்த நேரத்தில் எனக்குள் பெருமை ஏற்பட ஆரம்பித்தது. நான் நன்றாக படிக்கிறேன் என்ற பெருமையில் வகுப்பில் தோல்வியுறும் மாணவர்களை கேலிச் செய்வேன், அவர்கள் மனம் வேதனைப்படும் விதமாக பேசுவேன். ஆரம்பத்தில் விளையாட்டாக ஆரம்பித்த இந்த எண்ணம், நான் மேலானவன் என்ற எண்ணத்தை எனக்குள் விதைக்க ஆரம்பித்தது. நீதியின் தேவன் நீதியை செய்யாமல் இருப்பாரோ! PG முடித்த அந்த வருடத்தில் எதிர்பாராத விதமாக எனது கையில் மின்சாரம் தாக்கப்பட்டு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டேன். என் தம்பி 5 வினாடி மின்சாரத்தைத் துண்டிக்க தாமதித்திருந்தால் அன்றைக்கே என் உயிர் என்னை விட்டு பிரிந்திருக்கும். தேவ கிருபையால் உயிர் காப்பாற்றப்பட்டது. ஆனால் இரத்தம் அதிகம் போனதினால் 3 மாதங்கள் படுக்கையில் இருந்தேன். இது நடந்த பிறகும் நான் பெருமையை விடவில்லை. அந்த வருடத்தில் M.Phil படிக்க ஆசைப்பட்டு ஒரு கல்லூரியில் படிப்பை ஆரம்பித்தேன். உடல் சூழ்நிலை காரணமாக பல நாட்கள் கல்லூரி செல்லவில்லை. அதுவரை ஆசிரியர் நடத்தும் போது கவனித்து படிப்பதையே வழக்கமாக கொண்டிருந்த என்னால், கல்லூரிக்கு செல்ல முடியவில்லை. அப்படியே கல்லூரிக்கு சென்றாலும் கையில் ஏற்பட்ட காயத்தினால் எழுத முடியவில்லை.

**என்ன பிரதர் கழுகு போல் உயர உயர எழும்பிக் கொண்டிருந்த உங்கள் வாழ்வில் பெருமை என்ற ஒரு சின்ன பாவத்தால் இவ்வளவு பெரிய சரிவை அடைந்த நீங்கள், இதிலிருந்து எப்படி வெளி வந்தீர்கள்?**

கணக்கு எழுதி பார்க்காமல் படிக்க முடியாது என்பது அனைவரும் அறிந்ததே. என்னால் எழுத முடியாததால் அந்த செமஸ்டர் தேர்வில் ஒரு பாடம் தோல்வியுற்றேன். 6ம் வகுப்பிற்கு பின் அப்பொழுது தான் தேர்வில் தோல்வியுற்றேன். அதுவும் Semester தேர்வில் தோல்வியுற்றது மனதளவில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியது. நான் தேர்ச்சி பெற்றப் பாடங்களிலும் பெரிய அளவு மதிப்பெண்கள் எடுக்கவில்லை. என்னுடைய தவறையும், நான் பிறருக்கு ஏற்படுத்தின காயங்களின் வலியையும் உணர்ந்தேன். தேவனின் பாதத்தில் விழுந்து மன்னிப்புக் கேட்டேன். நான் காயப்படுத்தின நண்பர்களிடமும் மன்னிப்பு கேட்டேன். தேவன் என் ஜெபத்தைக் கேட்டார். அடுத்த தேர்வில் தேர்ச்சிப் பெற்று கல்லூரியில் இருந்து வெளியே வரும்போது Arrear எதுவும் இல்லாமல் தேர்ச்சி பெற்றேன். அதன்பின் தேவனின் சித்தப்படி Ph.D படிக்க முயற்சித்தேன். Ph.D படிப்பிற்கு guide அவசியம். Arrear வைத்த எனக்கு யார் guide பண்ணுவார்கள் என்று யோசித்தேன். ஆனால் என் தேவனின் மீது நம்பிக்கை வைத்தேன். எனக்கு ஒரு நல்ல guideஐ தேவன் முன்குறித்து வைத்திருந்தார். தற்போது Ph.D முடிக்கும் தருவாயில் உள்ளேன்.



**சூப்பர்... செய்த தவறை உணர்ந்து மனந்திரும்பியதால் தேவன் மறுபடியும் உங்களை உயர்த்தியுள்ளார். எங்கள் வாலிபப்பிள்ளைகளுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

நம்பிக்கையற்ற சூழலாக இருந்தாலும் நம்பிக்கையின் தேவன் மீது வைக்கும் விசுவாசம் சகலத்தையும் ஆசீர்வாதமாக மாற்றும். நாம் விளையாட்டாக செய்யும் சிறு தவறு கூட நம் வாழ்க்கையை புரட்டிப் போடும். எனவே தேவன் நம்மை உயர்த்தும் போது அந்த உயர்வில் பெருமை கொள்ளாமல், தாழ்மையுடன் உயர்த்திய தேவனுக்கு சாட்சியாக வாழ வேண்டும். ஒருவேளை நம்மையும் அறியாமல் தவறியிருப்போமாயின் தேவன் அதை நமக்கு உணர்த்தும் போது, உடனே மனந்திரும்பி அறிக்கையிட்டு அவரின் மன்னிப்பை பெற்றுக் கொள்ள வேண்டும். எத்தனை முறை இடறினாலும் அத்தனை முறையும் நம்மை மன்னிக்கும் இரக்கமுள்ள தேவன் நம் ஆண்டவர். பெலனற்ற நேரத்தில் நம்மை பெலப்படுத்தி நிலை நிறுத்துவார். அவரை அண்டிக் கொண்டோர் பாக்கியவான்கள்.

**அன்பான வாலிபர்களே! சகோதரர் சாமுவேல் ஐசக் வாழ்க்கையில் தேவன் கூட இருந்து வழிநடத்தி வந்திருக்கிறார். இன்றைக்கு நீங்கள் கூட சாம் ஐசக் போல பெருமைக்கு இடங்கொடுத்ததால் நன்மையை இழந்து நிற்கிறீர்களா? இன்றைக்கு மன்னிப்புக் கேட்டு மனந்திரும்புங்கள். இழந்த ஆசீர்வாதங்களைத் திரும்பப் பெற்றுக் கொள்வீர்கள் ■**

புதிர்: வில்லியம்

BIBLE Treasure Hunt

# வேதாகம புதையல் வேட்டை


1 முதல் 3 படங்களில் வேதாகமத்தில் உள்ள ஒரு நபரின் பெயர் மறைந்திருக்கிறது. அவர் யார் என்று கண்டுபிடித்து எழுதவும்.

4 முதல் 5 படங்களில் வேதாகமத்தில் உள்ள ஒரு சம்பவம் இருக்கிறது. அது என்ன சம்பவம் என்று குறிப்பிடவும்.

1.  ______________________

2. 

______________________

3.  ______________________

4. 

______________________

5.  ______________________

கடந்த மாத வெற்றியாளர் சகோதரி **எஸ்தர்** (கடலூர்) அவர்களை வாழ்த்துகிறோம்.

**பதில் வந்து சேர வேண்டிய கடைசி நாள்**
**15.05.2023**

Jesus Redeems Youth Ministries, Nalumavadi, Thoothukudi Dist - 628 211.
Cell: 9750955547 | Tel: 04639- 353535. eMail: youth@jesusredeems.org

**கடந்த மாத விடைகள்**

1. வாலிபனை (மாற்கு 16:5)
2. சரீரத்தை (லூக்கா 24:3)
3. பிரகாசமுள்ள (லூக்கா 24:4)
4. அப்போஸ்தலர்க்கு (லூக்கா 24:10)
5. பூமி (மத். 28:2)
6. செத்தவர்கள் (மத். 28:4)
7. தோட்டக்காரன் (யோவான் 20:15)
8. பரிசுத்த ஆவியை (யோவான் 20:22)
9. வெள்ளையங்கி (மாற்கு 16:5)
10. மழையைப்போல (மத். 28:3)

# Overthinking

ஆலோசனை: அரி





நான் கல்லூரி மூன்றாம் ஆண்டு படிக்கிறேன். சந்தோஷமாக சிரித்து பேசிக் கொண்டிருக்கும் போது திடீரென்று பலவிதமான யோசனைகள் தோன்றி, அதை அப்படியே அடிக்கடி யோசித்துக் கொண்டே இருக்கிறேன். என்னையும் அறியாமல் யோசித்துக் கொண்டிருப்பதால் அந்த எண்ணங்களிலிருந்து வெளியே வர முடியவில்லை. இப்படிப்பட்ட யோசனையால் என்னால் இயல்பாக இருக்க முடிவதில்லை. இதனால் நான் படிப்பதை பாதியில் நிறுத்திவிட்டு, புத்தகத்தை மூடிவிடுகிறேன். எனக்கு ஒரு கல்லூரி பேராசிரியராக பணிபுரிய வேண்டும் என்ற ஆசை உண்டு. இப்படி யோசிப்பதால் தலைவலி அதிகமாகி அப்படியே தூங்கி விடுகிறேன். மருத்துவரிடம் செல்ல வேண்டுமா? இது ஒரு வியாதியா? என்று புரியவில்லை. எனக்கு உதவி செய்யுங்கள். என்னுடைய பிரச்சனையை எனக்கு புரியவையுங்கள், Please.

- சுரேஷ், கோயம்புத்தூர்.

அன்பு தம்பி சுரேஷ்! உங்களின் உள்ளான மன வேதனையை நன்கு அறிய முடிகிறது. இன்றைய இளைஞர்கள் சிந்தனை உலகத்திலேயே தங்கள் வாழ்க்கையை கழித்து விடுகிறார்கள். வாழ்க்கையில் ஒரு பெரிய தீர்மானம் எடுக்கும் போது அதிகமாக யோசித்துதான் முடிவு எடுக்க வேண்டும் என்று பெரியவர்கள் கூறுவார்கள். அதாவது ஒரு மேல் படிப்பு, வேலைக்கு சேரும் போது எந்த Companyயில் Join பண்ண வேண்டும், திருமண காரியம், வீடு கட்டுவது, ஒரு கார் வாங்குவது என இப்படி முக்கியமான தீர்மானங்கள் எடுக்கும் முன் யோசித்து சிறந்த முடிவை எடுப்பது இயல்பு. ஆனால் ஏதோ ஒரு காரியத்தை ஆள்மனதில் மீண்டும் மீண்டும் யோசிப்பது, அந்த யோசனையிலே மூழ்கி அப்படியே உறைந்து போவது தான் தீவிர யோசனை (Overthinking) என்று சொல்வார்கள்.

ஒரு காரியத்திற்காக யோசிக்கலாம், ஆனால் ஒரே காரியத்தை ஆழமாக யோசிக்க யோசிக்க அவை உங்களுடைய தூக்கத்தை, வேலையை, உறவுகளை, உடல் நலத்தை மற்றும் அன்றாட இயல்பு வாழ்க்கையை கண்டிப்பாக பாதிக்கும். Overthinking என்பது ஒரே காரியத்தை மீண்டும் மீண்டும் யோசிப்பது என்று சொல்லலாம். பல நேரம் கடந்த பல நிகழ்வுகளை யோசித்து கொண்டே இருக்கலாம் அல்லது எதிர்காலத்தைக் குறித்த கவலையாக இருக்கலாம்.






## யோசனைகளை தவிர்க்க சில டிப்ஸ்...

### i. குறிப்பெடுத்து குறைக்கலாம்

அதாவது எந்த சூழ்நிலையில், குறிப்பிட்ட நேரத்தில் அந்த யோசனையில் மூழ்கிறீர்கள். இப்படி குறிப்பெடுக்கும் போது எந்த சூழ்நிலை, என்ன காரியம் என்பதை அறிந்து, அந்த குறிப்பிட்ட செயலை, காரியத்தை யோசிக்க விடாமல் தடுக்கலாம்.

### ii. சிந்தனைக்கு சவால்

அதாவது உங்கள் மனது சொல்வதை ஏற்காமல், அதற்கு எதிர்மறையாய் யோசிக்க முயலும் போது அந்த சிந்தனையை தவிர்க்கலாம்.

**உதாரணமாக,** நான் தேர்வில் தோல்வியடைந்து விடுவேன் என்ற எண்ணம் வந்துக் கொண்டே இருக்கும்போது, நான் தேர்ச்சி பெற்று விட்டேன், இப்பொழுது ஒரு பெரிய கம்பெனியில் வேலை செய்கிறேன் என்று யோசியுங்கள், அந்த தோல்வியின் எண்ணம் தவிர்க்கப்படும்.

### iii. உங்கள் சரீரத்தை அசைக்க ஆரம்பியுங்கள்

பல ஆராய்ச்சிகள் கூறும் அறிவுரை, உடற்பயிற்சி இப்படிப்பட்ட யோசனைகளைத் தவிர்க்க வகை புரியும். ஒரு நடைபயணம், Jogging, Evening Walking கண்டிப்பாக ஒரு மாற்றத்தை தரும்.

### iv. முடிந்தால் மருத்துவ நிபுணர்களை சந்திக்கலாம்

சுரேஷ், நான் முன்பு சொன்னபடி இது ஒரு மனவியாதி அல்ல. உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், மருத்துவ ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளலாம். அவர் உங்களின் பிரச்சனையை சரியாய் புரிந்து, நேர்த்தியாய் சரி செய்யலாமே.

மேலும் சுரேஷ், வேதம் மிக தெளிவாக கூறுகிறது. “நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்” (பிலி. 4:6,7).

அநேக நேரம் நம் கவலைகளே நம்மை வாட்டி வதைக்கின்றன. இன்றைய உங்கள் கவலைகளை இயேசுவின் மேல் வைக்கும் போது, அவர் உங்களுக்கு உலகம் கொடுக்க முடியாத சமாதானத்தையும், நம்பிக்கையையும் கொடுக்க முடியும். எனவே ஜெபித்து செயல்படுங்கள். உங்கள் வாழ்க்கையில் உள்ள வீணான எண்ணங்களும், எதிர்மறையான யோசனைகளும் மறையும். ஒரு நம்பிக்கை பிறக்கும், புது வழி திறக்கும்!





முகப்பு செய்தி: சதீஷ்

# தாமதம் செய்யார்!

இன்றைய உலகில் ஒவ்வொரு வாலிபர்களும் அவர்கள் விரும்பும் ஒவ்வொரு காரியங்களையும் ஒரு நொடிப் பொழுதில் நிறைவேறிவிட வேண்டும் என்று நினைக்கிறார்கள். ஐந்து நிமிடம் கூட காத்திருக்க மனமில்லாத இன்றைய தலைமுறையினர், எப்படி தன்னுடைய கனவு நிறைவேறும் வரை காத்திருப்பார்கள் என்று தெரியவில்லை. ஒரு கோழிக்குஞ்சு இந்த உலகத்தை பார்க்க சில நாட்கள் காத்து இருக்க வேண்டியதாய் இருக்கிறது. இந்த காத்திருக்கிற நேரம் தனக்கு தாமதமாகிறது என்று நினைத்து அவசரப்பட்டு அது ஓட்டை உடைத்து வெளியே வந்தால் ஆபத்து நேரிடும். அதுபோலவே உங்கள் வாழ்க்கையில் ஏற்படும் தாமதங்களை பொறுமையுடன் சகித்துக் கொள்ளுங்கள், இல்லையெனில் அது உங்களுக்கு ஆபத்தாகி விடும். நம்முடைய வாழ்க்கையில் வரும் ஒவ்வொரு தாமதமும், காத்திருக்கிற நேரம் என்பதை மறந்து போகக்கூடாது.

நம்முடைய ஆண்டவர் எல்லாவற்றையும் சரியான நேரத்தில் நிறைவேற்றுவார். அவரது கடிகாரம் எப்போதும் சரியாகவே ஓடிக் கொண்டிருக்கிறது. நம்முடைய கடிகாரம்தான் சில வேளைகளில் காலதாமதமாகவும், சில சமயங்களில் வேகமாகவும் ஓடுகிறது. நம் வாழ்க்கையில் காலதாமதம் ஏற்படும் போது மனதில் ஏற்படும் கேள்வி என் ஜெபத்திற்கு ஏன் இன்னும் ஆண்டவர் பதில் தரவில்லை, அவர் சொன்னதை நிறைவேற்றாமல் ஏன் தாமதம் செய்கிறார் என்று பல கேள்விகள் உள்ளத்தில் எழும்பும், ஒரு வேளை உங்கள் மனதில்கூட இப்படிப்பட்ட கேள்விகள் இருந்தால், நீங்கள் இன்னும் ஆண்டவரின் கால அட்டவணையை சரியாக புரிந்து கொள்ளவில்லை என்றுதான் அர்த்தம். ஏனெனில் **"அவர் சகலத்தையும் அதனதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்திருக்கிறார்;... (பிரசங்கி 3:11)**. அவர் எப்போதும் தாமதம் செய்பவர் இல்லை. எல்லாவற்றையும் சரியான நேரத்தில் சரியாய் செய்கிற தேவன்.

இஸ்ரவேலின் இராஜாவாகிய சவுலுக்கு, சாமுவேல் தீர்க்கதரிசியின் ஏழு நாள் வருகைக்காக காத்திருக்க மனமில்லை. ஜனங்கள் தன்னை விட்டு பிரிந்து போவதை சகிக்க முடியாமல் அவர்களை திருப்திப்படுத்துவதற்காக சாமுவேல் செலுத்த வேண்டிய பலியை சவுல் அவசரப்பட்டு செலுத்தினதினால் தேவன் தந்த ஸ்தானத்தை இழந்து போனான். இன்றைக்கும் அநேக வாலிபர்கள், தங்களுடைய நண்பர்கள் மற்றும் பெற்றோர்கள் என மற்றவர்களை திருப்திப்படுத்துவதற்காக தேவன் அவர்களுக்கு வைத்த தரிசனத்தை நோக்கி ஓடாமல் இருப்பது தரிசனம் தந்த தேவனை துக்கப்படுத்துவதாக இருக்கிறது.



'பொறுமையாயிருக்கிறவர்களைப் பாக்கியவான்கள்' **(யாக். 5:11)** என்று வேதம் சொல்கிறது. சவுல் தகனபலியை செலுத்தாமல் பொறுமையாக சாமுவேலின் வருகை வரை காத்திருந்திருந்தால் தேவ தரிசனத்தையும் ஸ்தானத்தையும் இழந்திருக்க மாட்டார்.

17 வயதில் தேவனிடமிருந்து தரிசனத்தைப் பெற்ற யோசேப்பின் வாழ்க்கையில் எல்லாம் எதிர்மறையாகவே இருந்தது. அவனுடைய தரிசனம் நிறைவேற எத்தனை பாடுகள், எவ்வளவு சோதனைகள், ஏராளமான ஏமாற்றம் இவை எல்லாவற்றிலும் யோசேப்பு பொறுமையாய் இருந்து தரிசனத்தை விட்டு விலகாமல், நிச்சயம் ஒரு நாள் தேவன் தந்த தரிசனம் நிறைவேறும் என்று 13 ஆண்டுகள் காத்திருந்தான். காத்திருக்கிற நேரம் என்பது ஆண்டவர் நம்மை உருவாக்குகிற நேரம் என்பதை பலரும் புரிந்து கொள்வதில்லை. ஒருவேளை யோசேப்பை ஆண்டவர் 17 வயதில் எகிப்தின் அதிகாரியாக உயர்த்தி இருந்தால், அதை சிறப்பாக செய்து இருப்பாரா என்று தெரியவில்லை. அதனால்தான் ஆண்டவர் அவரை போத்திபார் வீட்டிலும், சிறைச்சாலையிலும் வைத்து உருவாக்கினார். தன்னுடைய வாழ்வில் வந்த ஒவ்வொரு தாமதத்தின் போதிலும் தேவன் என்னை உருவாக்குகிறார் என்பதை யோசேப்பு நன்கு அறிந்து இருந்ததினால்தான் பொறுமையாக, தரிசனம் நிறைவேற காத்திருந்து அதை அடைந்தான். உங்கள் வாழ்க்கையிலும் தரிசனம் நிறைவேற காலதாமதம் ஆகிறதா? கலங்காதீர்கள்! ஆண்டவர் நீங்கள் இருக்கிற இடத்தில் உங்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறார். பொறுமையாய் இருங்கள், காலம் நிறைவேறினவுடன் உங்கள் தரிசனம் நிறைவேறும். **"நெடுங்காலமாய்க் காத்திருக்குதல் இருதயத்தை இளைக்கப்பண்ணும்; விரும்பினது வரும்போதோ ஜீவவிருட்சம்போல் இருக்கும்" (நீதி. 13:12).**

**எனக்கு அருமையான வாலிபர்களே! யோசேப்பு தன்னுடைய வாழ்க்கையில் தரிசனம் நிறைவேற கால தாமதம் ஆனபோது சோர்ந்து போகவுமில்லை, ஆண்டவரை விட்டுப் பின்வாங்கவும் இல்லை. தரிசனத்தை தந்த ஆண்டவர் நிச்சயம் ஒரு நாள் அதை நிறைவேற்றுவார் என்ற விசுவாசத்துடன் காத்திருந்ததினால் தான் தேவனால் அந்த தரிசனத்தை நிறைவேற்ற முடிந்தது. அதுபோலவே ஆண்டவர் உங்கள் வாழ்க்கையிலும் தரிசனங்களை வைத்திருக்கிறார். ஒருவேளை அது தாமதமாகிக் கொண்டிருந்தால் சோர்ந்து போகாதீர்கள். நிச்சயம் ஒரு நாள் உங்கள் தரிசனத்தை தேவன் நிறைவேற்றுவார்.**

"குறித்தகாலத்துக்குத் தரிசனம் இன்னும் வைக்கப்பட்டிருக்கிறது; முடிவிலே அது விளங்கும், அது பொய் சொல்லாது; அது தாமதித்தாலும் அதற்குக் காத்திரு; அது நிச்சயமாய் வரும், அது தாமதிப்பதில்லை" (ஆபகூக் 2:3).






திருச்சியில்...
எழுப்புதல் முழு இரவு ஜெபம்
ஜூன் 9, வெள்ளிக்கிழமை
நேரம் :
இரவு 9 மணி முதல்
அதிகாலை 3 மணி வரை
செய்தியும் ஜெபமும் :
சகோ. அவினாஷ்
இடம்: பின்னர் அறிவிக்கப்படும்
தொடர்புக்கு:
9489775075 I 8344119000



# முழு இருதயத்தோடு கர்த்தரை தேடுங்கள்!



செய்தி: மோகன் சி. லாசரஸ்

**"அவன் வெளியே ஆசாவுக்கு எதிர்கொண்டுபோய், அவனை நோக்கி: ஆசாவே, யூதா பென்யமீன் கோத்திரங்களின் சகல மனுஷரே, கேளுங்கள்; நீங்கள் கர்த்தரோடிருந்தால், அவர் உங்களோடிருப்பார்; நீங்கள் அவரைத் தேடினால், உங்களுக்கு வெளிப்படுவார்; அவரை விட்டீர்களேயாகில், அவர் உங்களை விட்டுவிடுவார்" (2 நாளா. 15:2).** இஸ்ரவேல் தேசம் இரண்டாக பிரிக்கப்பட்டு, ஒன்று இஸ்ரவேல் ராஜ்யம் என்றும், இன்னொன்று யூதா ராஜ்யம் என்றும் அழைக்கப்பட்டது. இந்த யூதா ராஜ்யம் எருசலேமை மையமாகக் கொண்டு ஆட்சி நடத்தப்படுகிறது. யூதாவில் ஆசா என்கிற இராஜா அரசாட்சிக்கு வருகிறான். ஆசாவினுடைய தகப்பன் காலத்தில் தேசம் தீட்டுப்பட்டு போனது. ஏனென்றால் அசுத்தங்கள் மற்றும் தேவனுக்கு பிரியமில்லாத காரியங்களுக்கு இடம் கொடுத்து விட்டான். ஆனால் ஆசா இராஜா அரசாட்சிக்கு வந்தவுடனே தேசத்தில் ஒரு எழுப்புதல் உண்டானது. கர்த்தருடைய கட்டளைகளின்படி நடக்க, ஜனங்களுக்கு உபதேசம் செய்து, எழுப்புதலுக்கான காரியங்களைச் செய்கிறான். தேசம் முழுவதும் ஒரு எழுப்புதல் உண்டானது. அப்பொழுது தேசம் அமரிக்கையாகவும், ஆசீர்வாதமாகவும்



இருந்தது என்று (2 நாளா. 14:2-5) வாசிக்கிறோம்.

ஆசா கர்த்தரைத் தேடினபடியால் அவன் செய்ததையெல்லாம் கர்த்தர் வாய்க்கப்பண்ணி, ஆசீர்வாதமாக வைத்திருந்தார். அந்த நேரத்தில் பத்து லட்சம் இராணுவ வீரர்களோடுகூட, எத்தியோப்பியா தேசத்தின் இராஜா ஆசாவுக்கு விரோதமாக புறப்பட்டு வருகிறான். அப்பொழுது, ஆசா தன்னுடைய இராணுவத்தை அழைத்துக் கொண்டு போய் கர்த்தரிடத்தில் ஜெபம் பண்ணின பிறகு அவன் போய் யுத்தம் செய்தபடியினால், கர்த்தர் ஆசாவிற்கு துணை நின்று பெரிய வெற்றியைக் கொடுக்கிறார். அவன் வெற்றி பெற்று தன் இராணுவத்தோடு திரும்பும் போது, கர்த்தருடைய ஆவியானவர் அசரியா என்ற ஒரு தீர்க்கதரிசியின் மீது இறங்குகிறார். இந்த தேவ மனுஷன் ஆசாவுக்கு எதிர்கொண்டுபோய், **"... யூதா பென்யமீன் கோத்திரங்களின் சகல மனுஷரே, கேளுங்கள்; நீங்கள் கர்த்தரோடிருந்தால், அவர் உங்களோடிருப்பார்; நீங்கள் அவரைத் தேடினால், உங்களுக்கு வெளிப்படுவார்; அவரை விட்டீர்களேயாகில், அவர் உங்களை விட்டுவிடுவார்" (2 நாளா. 15:2)** என்கிற செய்தியை சொல்கிறான்.

கர்த்தரை நாம் எப்படி தேடினால் அவர் தன்னை வெளிப்படுத்துவார்? எப்படி தேடினால் அவரை தரிசிக்கலாம்? எப்படி தேடினால் அவருடைய குரலை கேட்கலாம்? எப்படி அவரோடுகூட நெருக்கமாக வாழலாம்? எப்படி தேடினால் அவரோடு பேச முடியும்?

**"உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடினீர்களானால், என்னைத் தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள். நான் உங்களுக்குக் காணப்படுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்;..." (எரே. 29:13, 14).** "அவரை நான் பார்க்க வேண்டும், ருசிக்க வேண்டும், அவருடைய தொடுதலை உணர வேண்டும், அவரோடு நான் நெருக்கமாக இருக்க வேண்டும் என்று "நீங்கள் தாகத்தோடு முழு இருதயத்தோடு தேடினால் உங்களுக்கு இயேசு வெளிப்படுவார். **"...தங்கள் முழுமனதோடும் அவரைத் தேடினார்கள்; கர்த்தர் அவர்களுக்கு வெளிப்பட்டு, சுற்றுப்புறத்தாரால் யுத்தமில்லாதபடிக்கு அவர்களை இளைப்பாறப்பண்ணினார்" (2 நாளா. 15:15)** என்று வசனம் சொல்கிறது. "தேவனை ஒருவனும் ஒருக்காலுங்

கண்டதில்லை,...'' (யோவான் 1:18). பிதாவாகிய தேவன் ஒருவரும் சேரக்கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிறவர். அவரை நாம் பார்க்க முடியாது. என்னைக் கண்டு உயிரோடு இருக்க முடியாது என்று அவரே சொல்கிறார். அவர் அவ்வளவு பிரகாசமானவர், அவ்வளவு மகிமையானவர். அந்த மகிமையை பார்க்க முடியாது.

யாத்திராகமம் 33ம் அதிகாரத்தில், ''என் சமூகம் உனக்கு முன்பாக செல்லும். நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன்'' என்று கர்த்தர் பேசுகிற குரலை மோசே கேட்கிறார். அப்பொழுது மோசேக்கு ஒரு ஆசை வருகிறது. **"...உம்முடைய மகிமையை எனக்குக் காண்பித்தருளும்" (யாத். 33:18)** என்று அவர் ஜெபம் செய்கிறார். அதனுடைய அர்த்தம் என்ன? உம்முடைய குரலை நான் கேட்கிறேன், அக்கினிக்குள் இருந்து பேசுகிறீர் நான் கேட்கிறேன், உம்முடைய குரல் என் காதில் தொனிக்கிறது, என்னை வல்லமையாக பயன்படுத்துகிறீர், அற்புத அடையாளங்கள் எல்லாம் நடக்கிறது, நீர் என்கூட இருக்கிறீர், அதெல்லாம் எனக்கு தெரிகிறது, ஆனாலும் உம்முடைய முகத்தை எனக்கு காண்பியும்'' என்பதாக கேட்கிறார். மோசேயினுடைய உள்ளத்தில் நான் அவரைப் பார்க்க வேண்டும் என்று முழு இருதயத்தோடும் வாஞ்சிக்கிறார். ஆண்டவர் சொல்கிறார், ''மோசே என்னுடைய முகத்தை பார்த்து யாரும் உயிரோடு இருக்க முடியாது. எனவே நீ என் முகத்தைக் காணமாட்டாய், நான் சொல்கிற இடத்தில் வந்து அங்கே கன்மலையில் நில். நான் கடந்து போவேன், என்னுடைய பின்பக்கத்தை நீ பார்க்கலாம் என்று ஆண்டவர் சொல்கிறார். தன் முழு மகிமையோடு கர்த்தர் தன்னை காண்பித்தால், மோசே தாங்கிக் கொள்ள முடியாது என்று தன் சாயலை ஆண்டவர் மோசேக்கு காண்பித்தார். மனுஷன் ஒருவனும் தேவனைக் கண்டதில்லை என்று சொன்ன அதே ஆண்டவர் மோசேக்கு தன்னை வெளிப்படுத்தினார். ஏசாயா 6:1ம் வசனத்தில், 'தேவாலயத்தில் உயரமும் உன்னதமுமான சிங்காசனத்தின்மேல் கர்த்தர் வீற்றிருக்கக்கண்டேன்' என்று ஏசாயா எழுதுகிறார். அவருடைய மகிமை அவ்வளவு பிரமாண்டமாக இருந்தபடியினால், சிங்காசனத்தில் அமர்ந்திருக்கிற கர்த்தரை அவர் பார்த்திருக்க வேண்டும். ஆதி. 28:13ம் வசனத்தில், யாக்கோபுக்கு தரிசனத்தில் கர்த்தர் வெளிப்படுகிறார். இந்த புதிய ஏற்பாட்டு காலத்தில் இருக்கிற நமக்கும் ஒரு பாக்கியம் என்னவென்றால், அந்த மகிமையின் தேவனை நாம் பார்த்து உயிரோடு இருக்க முடியாது என்று அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் அவர் தம்மை நமக்கு வெளிப்படுத்துகிறார். ஆகவேதான், என்னை காண்கிறவன் பிதாவை காண்கிறான் என்று இயேசு சொன்னார். அந்த பரலோக மகிமையைத் துறந்து, அவர் இந்தப் பூமிக்கு இறங்கி வந்தார். அந்த முழு மகிமையோடு வந்திருந்தால் உலகம் தாங்காது. ஆகவேதான், ஏழ்மை கோலம் எடுத்து மனிதனாக வந்து, மரித்து உயிர்த்தெழுந்தார். உயிர்த்தெழுந்த பிறகும் கர்த்தர் அநேகருக்கு தன்னை வெளிப்படுத்தினார்.


மோசேயைக் குறித்து, என் சாயலை அவன் பார்க்கிறான் என்று கர்த்தர் சொல்கிறார். அப்போது, பழைய ஏற்பாட்டு காலத்திலே அந்த பாக்கியம் என்றால், பிதாவை வெளிப்படுத்தும்படிக்கு இறங்கி வந்த இயேசுவின் இரட்சிப்பைப் பெற்று, அவருடைய அபிஷேகத்தைப் பெற்றிருக்கிற நமக்கு எவ்வளவு பெரிய சிலாக்கியம். அவர் தன்னை வெளிப்படுத்த விரும்புகிறார். அவரை பார்க்க வேண்டுமென்று யார் தாகத்தோடு இருக்கிறீர்களோ, அவர் உங்களை சந்திக்கப் போகிறார். நீங்கள் ஊழியக்காரனையே தேடிக் கொண்டிருந்தீர்கள் என்றால் அவர் உங்களை சந்திக்க மாட்டார். இயேசுவின் முகத்தை தேடுங்கள், அதிகாலையில் தேடுங்கள், முழு இருதயத்தோடு தேடுங்கள், விசுவாசத்தோடு தேடுங்கள். ''யார் என்ன சொன்னாலும் நம்பாமல், என்னை தேடு நான் உனக்கு வெளிப்படுவேன்'' என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார்.



**அன்பான வாலிபர்களே ! கர்த்தரைப் பார்க்க, தரிசிக்க, அவருடைய குரலைக் கேட்க ஆவலோடு இருக்கிறீர்களா? 'முழு இருதயத்தோடு என்னை தேடினால், என்னை தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள், நான் உங்களுக்கு காணப்படுவேன்' என்று கர்த்தர் வாக்குக்கொடுத்திருக்கிறார். இந்த வாக்குத்தத்தத்தை வைத்து முழு இருதயத்தோடு தேடுகையில் கட்டாயம் கர்த்தர் தன்னை உங்களுக்கு வெளிப்படுத்துவார், உங்களோடு பேசுவார், ஒரு மகிமையான அனுபவத்தில் உங்களை நடத்துவார். இதைவிட மேன்மையான ஒரு ஆசீர்வாதம் என்ன இருக்கிறது? 'வானத்தையும் பூமியையும் உண்டாக்கின தேவன் என்னோடு பேசுகிறார். என் சத்தத்தைக் கேட்டு அவர் பதில் தருகிறார்' என்பதை விட பெரிய ஒரு ஆசீர்வாதம் உலகத்தில் ஒன்றுமில்லை. தாகத்தோடு தேடுங்கள். முதலில் கர்த்தரைத் தேடுங்கள் அப்பொழுது எல்லாமே கூட கொடுக்கப்படும். உங்களுடைய வியாதி மாறும், தேவைகள் சந்திக்கப்படும், அற்புதங்கள் நடக்கும் !■**

சாதனை: சுமா

# புதிய துவக்கம்




**வளர்ச்சியின் பாதையில் ஒவ்வொருநாளும் சென்றுக் கொண்டிருக்கும் இளம் சாதனையாளர்களுக்கு என்னுடைய அன்பின் வாழ்த்துக்கள். குறுகிய காலத்தில் விடாமுயற்சியுடன் போராடி வெற்றிக் கண்ட ஒரு சாதனையாளரின் வாழ்க்கை பயணம் உங்களுக்காக!**

டெல்லியில் மார்ச் 4ம் தேதி 1982ஆம் ஆண்டு நடுத்தர குடும்பத்தில் பிறந்தவர் அமன் குப்தா. வெற்றிகரமாக பள்ளிப் படிப்பை முடித்த இவர், தந்தையின் ஆசையால் **CA** படிப்பை எடுத்துப் படித்தார். **CA** படிப்பின் மேலிருந்த ஆர்வம் கொஞ்சம் கொஞ்சமாக குறைய தொடங்கியது. இருந்தபோதிலும் **CA** படிப்பை முடித்து 2002ல் இந்தியாவின் இளைய CAவாக மாறினார். படிப்பை முடித்த பிறகு, **City Bank**ல் மேலாளராகப் பணி புரியும் வாய்ப்பைப் பெற்றார். பிறகு தந்தையுடன் அமன் குப்தா இணைந்து **Advanced Telemedia Pvt Ltd** என்ற புதிய தொழிலைத் தொடங்கினர். தொடங்கின தொழில் சரியான முன்னேற்றத்தை தரவில்லை. எனவே அமன் குப்தா மனைவியின் ஆலோசனையின்படி, தொழில் சம்பந்தமான **MBA** படிப்பைத் தெரிந்தெடுத்துப் படித்தார். பின்னர் வேறொரு கம்பெனியில் பணிபுரிய ஆரம்பித்தார்.







அமன் குப்தா, 2013ஆம் ஆண்டு சமீர் அசோக் மேத்தா என்ற நபருடன் இணைந்து **Imagine Marketing Services Private Limited** என்ற புதிய நிறுவனத்தை நிறுவினார். அடுத்த கட்டமாக தனது சொந்த மின்னணு நிறுவனமாக, போட் **(Boat)** என்ற மின்னணு நிறுவனம் 2016ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. **Boat** நிறுவனத்தின் இணை நிறுவனர் மற்றும் **CMO** அமன் குப்தா ஆவார்.

போட் நிறுவனம் பற்றிய செய்தி மற்றும் தகவல்களை மக்களிடமும் மற்றும் சமூக வலைத்தளங்களிலும் விளம்பரம் செய்தார். சமீர் நிறுவனத்தின் மார்க்கெட்டிங் பொறுப்பைப் பார்த்துக் கொண்டார். அமன் தன்னுடைய தயாரிப்புகளை முதலில் டெல்லியில் அறிமுகப்படுத்தினார். **Earphone** நிறுவனமான **Boat** நிறுவனத்தை அறிமுகப்படுத்திய போது இந்தியாவில் சுமார் 200 **Earphone** நிறுவனங்கள் இருந்தன. ஆனால் மக்கள் விரும்பும் வடிவம், திறன் மற்றும்

மக்களின் எதிர்பார்ப்பைக் கருத்தில் கொண்டு, உயர்திறன் கொண்ட **Headphones, Earphones, Speakers, Smart Watches** போன்ற தரம் மிகுந்தப் பொருட்களை தயாரித்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார். இன்று அநேகர் பயன்படுத்தும் அதிக திறன் கொண்ட பொருட்களை **Boat** நிறுவனம் தந்துக் கொண்டே இருக்கிறது. குறுகிய காலத்தில் **Boat** நிறுவனம் மிகப் பெரிய வெற்றியைப் பெற்றுள்ளது. உலகின் சிறந்த 5 அணியக்கூடிய பிராண்டுகள் தயாரிப்பதில் **Boat**-ம் ஒன்றாக உள்ளது.

அமன் குப்தா 'பிசினஸ் வேர்ல்ட் இளம் தொழிலதிபர் 2019', சூப்பர் 30 சி.எம்.ஓ-2020, லோக்மத் 2021ம் ஆண்டின் மிகவும் ஸ்டைலான தொழிலதிபர்-2021 போன்ற விருதுகளைப் பெற்றுள்ளார். 2020 நிதியாண்டில் இந்த நிறுவனம் ரூ. 500 கோடி வருமானம் ஈட்டியது. தன்னுடைய கடின உழைப்பின் காரணமாக இளம் வயதில் மிகப் பெரிய தொழிலதிபராக உருவாகியுள்ளார்.




**இதை வாசிக்கும் இளம் சாதனையாளர்களே! எதுவும் நம் வாழ்க்கையில் எளிதாக கிடைத்து விடாது. அதற்கென்று விலைக்கிரயம் கொடுக்க வேண்டும். அமன் குப்தா வாழ்க்கையில் தொழில் தொடங்கிய உடனேயே அவர் முன்னேறவில்லை. படிப்படியாகத்தான் முன்னேறினார். புதிய துவக்கத்தையும் கண்டார். நீங்களும் உங்களுக்கான திறமையை வளர்த்துக் கொண்டு செயல்படுத்த ஆரம்பியுங்கள்! உங்கள் வாழ்க்கையிலும் புதிய துவக்கம் உண்டாகும்!!**



# மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்த...



- மின்சாரத்தை அதிகமாக பயன்படுத்தும் மாலை 6 மணி முதல் 10 மணி வரையிலான நேரங்களில் அதிகமாக மின்சாரத்தை ஈர்க்கும் உபகரணங்களை பயன்படுத்தாமல் இருக்கலாமே!
- தேவையில்லாமல் இயங்கும் மின் விசிறி, மின் விளக்குகளை அணைத்து விடலாமே...
- AC பயன்படுத்தும் போது, கதவின் துவாரங்களையும், ஜன்னல், கதவுகளையும் அடைத்து விடலாமே...
- சாதாரணமான குண்டு பல்புகள் அதிகம் பயன்படுத்தாமல், குழல் விளக்குகள் (Tube lights) அல்லது C.F.L (Compact Fluorescent light) விளக்குள் பயன்படுத்தி மின்சாரத்தை சிக்கனப்படுத்தலாமே...
- தொலைக்காட்சியை எல்லோரும் அமர்ந்து பார்க்கும் போது ஆன் செய்யலாமே... காலை முதல் இரவு வரை டி.வி. ஓடுவதை தவிர்க்கலாமே...
- பிரிட்ஜை அடிக்கடி அணைத்து, ஆன் செய்யாதீர்கள்...
- வாஷிங்மெஷின் டிரையரை வெயில் நாட்களில் உபயோகப்படுத்தாமல், ஆடைகளை வெயிலில் காய வைக்கலாமே!
- Switch Onல் இருந்தால் சார்ஜ் போடாவிட்டாலும் மின்சாரத்தை இழுத்துக் கொள்ளும். எனவே சுவிட்சை அணைத்து விடலாமே...
- தேவையில்லாத நேரத்தில் அனைத்து மின் உபகரணங்களையும் அணைத்து வைக்கலாமே...

# யோசனையில் பெரியவர்!



# மோசேயின் உயர்த்தப்பட்ட கோல்

நிகழ்வு: கெத்சி கிளார்வின்

வேதாகமத்தில் இஸ்ரவேல் ஜனங்களுக்கு எதிராக வந்த யுத்தங்களையும் போராட்டங்களையும் அவர்களுக்காக கர்த்தர் கையாண்ட யுக்திகளையும் இந்த ''யோசனையில் பெரியவர்'' என்னும் தொடரில் நாம் வாசித்து வருகிறோம். அதின் வரிசையில், இஸ்ரவேலர்கள் சந்தித்த முதல் யுத்தத்தைப் பற்றியும், கர்த்தர் அவர்களுக்கு கொடுத்த யோசனைகள் பற்றியும் இம்மாதம் நாம் பார்க்கவிருக்கிறோம்.

கர்த்தர் வாக்குப்பண்ணின தேசமாகிய கானானுக்கு, வனாந்திர வழியாக சென்றுக் கொண்டிருந்த இஸ்ரவேலர்களோடு அமலேக்கியர் யுத்தம் பண்ண புறப்பட்டு வந்தனர். எகிப்தில் அடிமை வாழ்க்கை, செங்கற்சூளையில் கடின வேலை என இதை மட்டுமே கண்ட இஸ்ரவேலர்கள் திடீரென அவர்களால் கூடாத காரியமான ஆயுதம் ஏந்தி யுத்தம் செய்யவேண்டிய சூழ்நிலை வந்தபோது அவர்களின் மனநிலையை எப்படி இருந்திருக்கும் என்று சற்று யோசித்துப் பாருங்கள்.

எனக்கு இப்பொழுது வந்திருக்கும் பிரச்சனையை எப்படி நான் மேற்கொள்வது? நான் எப்படி விடுதலை பெறுவது? என இதுபோன்ற சூழ்நிலையில் நீங்கள் உள்ளீர்களா? விசுவாசியுங்கள்! நம் தேவன் யோசனையில் பெரியவர்.

இச்சம்பவத்தில், அமலேக்கியரை வீழ்த்த கர்த்தர் மோசேக்கு தெரிவித்த யுக்தி என்னவென்றால், மோசே மலை உச்சிக்கு சென்று தன் கோலை கையில் பிடித்தவாறு, தன் கைகளை உயரே தூக்கி நிற்க வேண்டும். வெறும் கோலை பிடித்தபடி கரங்களை உயர்த்தி நின்றால் யுத்தத்தில் வெற்றி பெற முடியுமா? ஆம், முடியும்! அதை செய்ய சொல்பவர் கர்த்தராக இருப்பதினால் நிச்சயம் வெற்றி பெற முடியும். ஏனென்றால், 'அவர் சொல்ல ஆகும்; அவர் கட்டளையிட நிற்கும்'.

நாம் இச்சம்பவத்தில் கவனிக்க வேண்டிய முக்கியமான காரியம் என்னவென்றால், மோசே அங்கே ஒரு ஜெப வீரனாய் போய் நிற்கவில்லை, ஒரு விசுவாச வீரனாகத்தான் நின்றார். எப்படியென்றால், **"அப்பொழுது மோசே யோசுவாவை நோக்கி: நீ நமக்காக மனிதரைத் தெரிந்துகொண்டு, புறப்பட்டு, அமலேக்கோடே யுத்தம்பண்ணு; நாளைக்கு நான் மலையுச்சியில் தேவனுடைய கோலை என் கையில் பிடித்துக்கொண்டு நிற்பேன் என்றான்." (யாத். 17:9).** 'நான் தேவனுடைய கோலை பிடித்துக் கொண்டு நிற்பேன்' என்பதாக மோசே மிக தெளிவாய் சொல்லுகிறார். 'இதினாலே நீ அற்புதங்களை செய்வாய்' என்று தேவன் மோசேக்கு கொடுத்த வாக்குத்தத்தம் ஆகும். தேவன் தந்த வாக்கை உறுதியாய் பிடித்துக் கொண்டு மோசே அந்த மலை உச்சியில் நின்றார்.

அன்பான வாலிபர்களே! சற்று கவனித்துப் பாருங்கள், மோசே அந்நேரத்தில் தேவனிடம் வேறெதுவும் பேசியதாக எழுதப்படவில்லை. மாறாக, உறுதியான விசுவாசத்தோடு வாக்குத்தத்தத்திற்கு அடையாளமாகிய கோலைப் பிடித்துக் கொண்டு நின்றார். **"எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக் கொண்டவர்களாயும் நில்லுங்கள்" (எபேசியர் 6:16)** என்ற வசனத்திற்கு ஏற்றப்படி, மோசே அங்கே ஓர் விசுவாச வீரனாய் நிற்பதை நாம் காண முடியும்.

உங்களுக்கு ஏற்படும் எதிர்பாராத பிரச்சனைகளோ போராட்டங்களோ எதுவாயினும், நீங்கள் செய்ய வேண்டியது; உங்களின் பிரச்சனை நேரங்களில் உங்கள் புலம்பலின் சத்தத்தை அல்ல; தேவன் உங்களை நம்பப்பண்ணின வாக்குத்தத்தங்களை, கோலைப் போன்று உயர்த்தி பிடியுங்கள். அப்பொழுது உங்களின் யுத்தம் கர்த்தருடையதாய் மாறும்.

பாருங்கள்! இந்த யுத்தம் உண்மையிலேயே இஸ்ரவேலர்களுக்கும், அமலேக்கியருக்குமான யுத்தம் என்றாலும், எப்போதுமே மோசே யுத்தம் செய்ய சுயமாய் திட்டமிடாமல், தேவனிடத்தில் விசாரித்து அவர் சொன்ன யுக்தியைக் கைக்கொண்டு தேவனுடைய வாக்குத்தத்தமான கோலைப் பிடித்துக்கொண்டு விசுவாசமாய் நின்றாரோ, அப்போதே மோசேயின் யுத்தம் கர்த்தரின் யுத்தமாய் மாறிவிட்டது.

**எனவே, தேவனையும் அவருடைய வார்த்தையையும் விசுவாசிப்பவனுக்கு எதிராக வரும் யுத்தம் எல்லாம் தேவனுக்கு எதிரான யுத்தமே. தேவனே உனக்காக யுத்தம் செய்வார் ■**

சிறப்புக் கட்டுரை: ரவி



# தாமதம் தடையல்ல!

என் அன்புக்குரிய தம்பி, தங்கைகளுக்கு! இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இம்மாதக் கட்டுரையில் நாம் ஆராயவிருக்கும் தலைப்பு ''தாமதம் செய்யார்''. நண்பர்களே, நீங்கள் இரண்டு பேர் ஓர் இடத்தில் சந்திக்கலாம் என்று உடன்பட்டுக் கொண்டு, குறித்த நாளில், குறித்த இடத்தில் நீங்கள் அந்த இடத்திற்கு சென்று காத்திருக்கும்போது, மற்றொருவர் வரத் தாமதிக்கும் போது உங்களுக்குள் கோபம், எரிச்சல், விரக்தி என பலவிதமான உணர்ச்சிகள் வெளிப்படும். பொதுவாக, நாம் தாமதித்தாலும் நம்மிடம் யாரேனும் தாமதம் காட்டினால் அதை நாம் விரும்புவதில்லை. அதிலும் நாம் இருக்கும் சூழ்நிலை மிகவும் நிர்பந்தமானதாக இருக்குமானால், தாமதம் காட்டுவது நமக்கு மிகவும் எரிச்சல் மூட்டும் காரியமாக இருக்கும்.



**“குறித்தகாலத்துக்குத்தரிசனம்இன்னும்வைக்கப்பட்டிருக்கிறது; முடிவிலே அது விளங்கும், அது பொய் சொல்லாது; அது தாமதித்தாலும் அதற்குக் காத்திரு; அது நிச்சயமாய் வரும், அது தாமதிப்பதில்லை”** (ஆபகூக் 2:3) என்று வேதம் கர்த்தருடைய தரிசனத்தைக் குறித்து சொல்கிறது. கர்த்தருடைய தரிசனம் மற்றும் அவருடைய வார்த்தைத் தாமதிப்பதில்லை. ஏன்? ஏனென்றால், கர்த்தர் தாமதிப்பதில்லை. ஆம் நண்பர்களே, ஒருவேளை நீங்கள் தொடர்ந்து ஜெபிக்கிற ஒரு ஜெப விண்ணப்பத்திற்காகவோ அல்லது குடும்பம் மற்றும் நெருங்கியவர்களின் இரட்சிப்புக்காகவோ, அல்லது தேசத்தின் எழுப்புதலுக்காகவோ, அல்லது தேவன் உங்களுக்கு கொடுத்த ஓர் வாக்குத்தத்தத்திற்காகவோ நீங்கள் காத்துக் கொண்டிருக்கலாம். உங்கள் சூழ்நிலை மிகவும் நிர்பந்தமாய் கூட இருக்கலாம். ஆனால் கர்த்தர் தாமதிப்பதில்லை பிரியமானவர்களே! நம்முடைய வேளையில் அவர் கிரியை செய்வதில்லை. மாறாக, தேவன் தம்முடைய வேளையில் கிரியைச் செய்வார்.

அதுவுமல்லாமல், கர்த்தருக்கு காத்திருத்தல் பயனில்லாமல் போகாது நண்பர்களே! **“கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலனடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள்”** (ஏசாயா 40:31) என்று கர்த்தருக்குள் காத்திருக்கிறவர்கள் அடையும் பெலனைக் குறித்துச் சொல்கிறது. ஆம் நண்பர்களே, வாக்குக்குரைத்த கர்த்தர் உண்மையுள்ளவர் என்று வேதம் சொல்கிறது. வானம் பூமி ஒழிந்துப்போனாலும் அவருடைய வார்த்தை ஒழிந்து போவதில்லை என்று வேதம் சொல்கிறது மற்றும் அவருடைய வேளையில் நிச்சயம் அவர் வெளிப்படுவார்.

லாசரு மரித்துப்போனான் என்ற செய்தி கேட்டவுடன், இயேசு தாம் இருந்த இடத்தில் இன்னும் இரண்டு நாட்கள் கூட தங்கினார். இரண்டு நாட்கள் சென்ற பின்போ அவருடைய வேளை வந்தது. அப்பொழுது அவர் எழுந்து சென்று லாசருவை உயிருடன் மீட்டுக்கொடுத்தார்.

**ஆம் நண்பர்களே! தேவன் தம்முடைய வேளையில், தமக்கு மகிமை உண்டாக, நம்முடைய வாழ்க்கையில் வெளிப்படுவார். “நிச்சயமாகவே முடிவு உண்டு; உன் நம்பிக்கை வீண்போகாது” (நீதி. 23:18) என்ற வார்த்தை நமக்கு நம்பிக்கைக் கொடுக்கிறது. அவர் வெளிப்படும் நேரத்தில் நீங்களும் நானும் ஆயத்தமாய் இருந்து நம்முடைய நன்மையை பெற்றுக் கொள்வோம். தேவன் தாமதிப்பதில்லை!**

# வாலிபர் எழுப்புதல் கூடுகை











கர்த்தர் இயேசு விடுவிக்கிறார் ஊழியத்திற்கு தேவன் கொடுத்த தரிசனத்தின் படி 50 கோடி ஆத்துமாக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கவும், 5 கோடி ஆத்துமாக்களை இரட்சிப்பிற்குள் நடத்த வேண்டும் என்ற தரிசன திட்டம் நிறைவேற, வாலிபர் ஊழியத்திற்கு 10 கோடி வாலிபர்களுக்கு சுவிசேஷம் அறிவித்து ஒரு கோடி வாலிபர்களை கர்த்தருக்குள் வழிநடத்த வேண்டுமென்ற தரிசன திட்டத்தை நிறைவேற்ற ஒவ்வொரு மாநிலங்களிலும் ஜெபிக்கிற, சுவிசேஷம் அறிவிக்கின்ற வாலிபர்களை எழுப்ப வேண்டும் என்ற தரிசனத்தோடு வாலிபர் ஊழியம் செயல்பட்டு வருகிறது. 2023ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஏப்ரல் வரை தமிழ்நாட்டில் பல மாவட்டங்களிலும் ஆந்திரா மாநிலத்தின் ஒருசில பகுதிகளிலும் நடத்த தேவன் கிருபை செய்தார். கடந்த மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் கல்வராயன் மலை, காஞ்சிபுரம், தாராபுரம், கொடைக்கானல், திருச்சி மற்றும் ஆந்திரா மாநிலம் குப்பம் பகுதியிலும் வாலிபர் எழுப்புதல் கூடுகை நடைபெற்றதில் **சுமார் 3000க்கும் அதிகமான** வாலிபர்கள் கலந்துகொண்டார்கள். வந்திருந்த வாலிபர்கள் ஜெபிக்கவும், சுவிசேஷம் அறிவிக்கவும் ஒப்புக்கொடுத்ததோடு, **98,900 கைப்பிரதிகள்** வாங்கி சென்றுள்ளனர். தேவனுக்கே மகிமை!















வேதாகம கதாபாத்திரம்: பெனிட்டா




**வாசிக்க :**
நியாயாதிபதி 3:9-19

## அறிமுகம்:

**காலேபின் சகோதரனாகிய கேனாசின் குமாரன் ஒத்னியேல் ஆவான். இவன் யூதா கோத்திரத்தை சேர்ந்தவன். ஒத்னியேல் என்ற பெயரின் அர்த்தம் 'தேவனின் வல்லமை' அல்லது 'தேவனின் சிங்கம்' என்பதாகும். இவன் காலேபின் மகள் அக்சாளை திருமணம் செய்து கொண்டான். யோசுவாவிற்கு பின் இஸ்ரவேல் ஜனங்களை நியாதிபதியாக 40 வருடங்கள் நியாயம் விசாரித்தான். இவன் இஸ்ரவேலில் எழும்பின முதல் நியாயாதிபதி. இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதை செய்தார்கள். கர்த்தரை மறந்து பாகால்களை சேவித்து, அந்நிய முகத்தில் பெண் கொடுத்தும் பெண் எடுத்தும் கர்த்தருக்கு மிகுந்த கோபம் மூட்டினர். ஆகவே தேவன் அவர்களை மெசொப்பொத்தாமியாவின் இராஜாவாகிய கூசான்ரிஷதாயீமின் கையில் விற்றுப் போட்டதால், 8 வருடம் அந்த இராஜாவின் கையில் அடிமைகளாக இருந்தார்கள். 8 வருடத்திற்கு பின்பு ஜனங்கள் கர்த்தரை நோக்கி கூப்பிட்டபோது அந்த நேரத்தில் கர்த்தர் எழுப்பின மனிதன் தான் ஒத்னியேல்.**

## நற்பண்புகள்

- தனது மாமனார் வறட்சியான நிலத்தைக் கொடுத்தபோதும், வருத்தம் கொள்ளவில்லை.
- கர்த்தரை அறியாத இஸ்ரவேலின் புதிய சந்ததி ஒருபுறம், இரட்டிப்பான பொல்லாப்பு நிறைந்த இராஜா ஒருபுறம், இப்படி சவால்கள் நிறைந்த இந்த தருணத்தில் பின்வாங்காமல் கர்த்தர் மேல் மட்டும் விசுவாசம் கொண்டு யுத்தம் செய்தான்.
- கர்த்தருடைய ஆவியானவர் இவன்மேல் இறங்கினதினால் இஸ்ரவேலுக்கு விடுதலை கிடைத்தது. தன்னிலும் பலவானான மெசொப்பொத்தாமியா இராஜாவை கர்த்தர் இவன் கையில் ஒப்புக் கொடுத்தார்.
- யோசுவாவிற்கு பின்பு நல்ல நியாயாதிபதி இவன். இஸ்ரவேலை 40 வருடங்கள் கர்த்தருக்குள் ஒத்னியேல் நடத்தின காலத்தில் தேசம் சமாதானமாக இருந்தது.
- யோசுவாவோடு முடிவடைந்த நல்ல தலைமைத்துவத்தை யெகூ, தெபொராள், கிதியோன் போன்றவர்கள் மீண்டும் சிறப்பாக தொடர அடித்தளமாக இருந்தவன் ஒத்னியேல்.

## சவால்கள்:

- ஜனங்களின் தவறுகளை கண்டித்து உணர்த்தி கர்த்தர் பக்கமாக மனம்திரும்பச் செய்தான்.
- 'கீரியாத்செப்பேரைச சங்காரம்பண்ணிப் பிடிக்கிறவனுக்கு, என் குமாரத்தியாகிய அக்சாளை விவாகம்பண்ணிக்கொடுப்பேன்' என்று காலேப் விடுத்த சவாலை ஏற்று யுத்தம் செய்து அப்பட்டணத்தைப் பிடித்து, அக்சாளை விவாகம் செய்தான்.
- ஜனங்களை கர்த்தர் பக்கமாக நடத்திய பின்பு யுத்தத்தில் வெற்றியைக் கண்டான்.

## நாம் கற்றுக்கொள்ளும் பாடம்:

ஒத்னியேல் கர்த்தரின் சித்தத்தின்படி கர்த்தருடைய யுத்தத்திற்கு சென்றதால் கர்த்தர் அதில் அவனுக்கு வெற்றியைக் கொடுத்தார். தேவ சித்தம் செய்யும்போது வெற்றி கிடைக்கிறது. கூடவே துணையாக அக்சாளை கொடுத்து ஆசீர்வதிக்கிறார். அதோடு நீர்பாய்ச்சலான நிலத்தையும் அவன் பெற்றுக்கொண்டான். அவன் மூன்று தலைமுறைக்கு மாதிரியாக இருந்தான் (காலேபின் நாட்களில், தன்னுடைய நாட்களில், இன்னும் தேவனை அறியாத வருங்கால தலைவர்களுக்கு). ஆகவே நாமும் தேவசித்தம் செய்வோம். தேசத்தை சுதந்தரிப்போம்■



வேதாகம தேசங்கள்: கெத்சி கிளார்வின்

# பாபிலோன்

அன்பு இளம் வாலிபர்களே! ஒவ்வொரு மாதமும் ‘வேதாகம தேசங்கள்’ என்ற தலைப்பில் வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சில தேசங்களையும் அதின் பட்டணங்களையும் குறித்து பல சுவாரஸ்யமான தகவல்களை நீங்கள் வாசித்து அறிந்திருப்பீர்கள். இம்மாதம் “பாபிலோன்”நகரத்தைப் பற்றி பார்க்கப் போகிறோம்.

## அறிமுகம்

- அக்காலத்தில், பாபிலோன் தேசத்தின் தலைமை இடமாய் செயல்பட்ட பட்டணம் ‘பாபேல்’ ஆகும்.
- இந்த பாபிலோன் நகரத்தை முதன்முதலில் கட்டியது யார் என்று தெரியுமா? வேதாகமத்தில் ஆதியாகமம் 10:10ல் குறிப்பிட்டுள்ளபடி, பூர்வ காலத்தில் ‘நிம்ரோத்’ என்னும் ஓர் அரசன் நிறுவிய நகரங்களில் ஒன்று பாபிலோன்.
- பாபிலோனியா தேசம் மெசப்பொத்தாமியா பகுதியில் அமைந்திருந்தது.
- இந்த தேசத்திற்குள்ளாக ஐப்பிராத்து, தைக்கிரீஸ் என்னும் 2 பிரபலமான ஆறுகள் ஓடுகின்றன.
- ஆதியாகமம் முதல் வெளிப்படுத்துதல் வரை பாபிலோனுக்கு 280க்கும் அதிகமான குறிப்புகளை வேதாகமம் நமக்கு அளிக்கிறது.
- இது கி.மு. 2300-ல் கட்டப்பட்டப் போதிலும், கி.மு. 1900-ல் ராஜாவின் அரண்மனை அங்கு நிறுவப்பட்ட பின்பே அது பேர் பெற்ற இடமாக மாறிற்று.

## பாபிலோனின் சிறப்பம்சங்கள்

- இது சுமார் 4000 ஆண்டுகள் பழமை வாய்ந்த ஓர் நகரம்.
- பொறித்த செங்கல்கள், அழகாக செதுக்கப்பட்டு, அலங்கரிக்கப்பட்ட கட்டிடங்கள், சிங்கங்களின் சிலைகள் என பாபிலோன் மிகச் சிறந்த நகரமாக இருந்தது.
- பாபிலோனின் தொங்கு தோட்டம் உலகப் புகழ் பெற்றதாகும்.
- 20,000-கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட முதல் பண்டைய நகரம் இந்த பாபிலோன் என்று வரலாற்று ஆசிரியர்களால் நம்பப்படுகின்றது.
- ஜார்ஜ் ஸ்மித், தனது ‘‘அசீரிய கண்டுபிடிப்புகள்’’ என்னும் நூலில், பாபிலோன் நகரத்தின் சுற்றளவு சுமார் 8 மைல்கள் என்று கருதுவதாக எழுதியுள்ளார்.
- இந்த நகரம் ஐபிராத்து (யூப்ரடீஸ்) ஆற்றின் இருபுறமும் அமைந்திருந்தது.

## பாபிலோனும் அதன் வீழ்ச்சியும்

- கர்த்தர் சில சமயங்களில் இஸ்ரேலைத் தண்டிப்பதற்காக பாபிலோனிய சாம்ராஜ்யத்தைப் பயன்படுத்தினார்.
- ஆனால் பாபிலோனின் பாவங்கள் இறுதியில் அதன் சொந்த அழிவை ஏற்படுத்தும் என தீர்க்கதரிசிகள் முன்னுரைத்தார்கள்.
- எரேமியா 50: 2-ல் குறிப்பிட்டுள்ளபடி, பாபிலோனியர்கள் பேகன் தெய்வங்களை வழிபட்டு, அவர்களில் முர்டக்கு அல்லது மெரொடாக், பெல் ஆகியோரை வழிபட்டு வந்தார்கள்.
- பொய் தெய்வங்களுக்கான பக்தி தவிர, பண்டைய பாபிலோனில் பாலியல் ஒழுக்கக்கேடு பரவலாக இருந்தது. கலாச்சாரம் மற்றும் கோவில் விபச்சாரிகள் பொதுவாக இருந்தனர்.
- தானியேல் 4ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டப்படி நேபுகாத்நேச்சார் என்னும் அரசன் ‘நான் கட்டின மகா பாபிலோன்’ என்று பெருமைப்பட்ட அத்தருணமே முற்றிலுமாய் அது சேதமடைந்ததை நம்மால் காண முடிகின்றது.
- புதிய ஏற்பாடு பாபிலோனைப் பாவத்தின் அடையாளமாக அடையாளப்படுத்துகிறது.
- தீர்க்கதரிசிகளால் முன்னறிவிக்கப்பட்டபடி பெருமைமிக்க பாபிலோன் இன்று பாழாய் போயிற்று.

**“...பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்”** (I பேதுரு 5:5).



# ஜெபக்கையேடு

## மே – 2023

ஜெபம்: பெனிட்டா



1. கடந்த ஆண்டு இந்தியாவில் சுமார் 90 பேர் வெயிலினால் மரித்துள்ளனர். இந்த வருடம் மரணங்கள் நடைபெறாமல் தடுக்கப்பட ஜெபிப்போம்.

2. கடந்த ஆண்டு இந்தியாவின் 9 நகரங்களில் வெப்பம் 45 டிகிரி செல்சியஸை எட்டியது. இந்த ஆண்டும் வடகிழக்கு மற்றும் கிழக்கிந்தியாவில் கடுமையான வெப்பம் நிலவும் என்று வானிலை மையம் தெரிவிக்கிறது. வெயிலின் தாக்கம் குறைய ஜெபிப்போம்.

3. கோடைக்காலங்களில் பல மாநிலங்களில் கடுமையான தண்ணீர் பற்றாக்குறை ஏற்படுகிறது. இந்த வருடம் தண்ணீர் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்கப்பெற ஜெபிப்போம்.

4. தண்ணீர் பற்றாக்குறை வராதபடி தேவன் ஏற்றவேளையில் தேவையான மழையைத் தந்து ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.

5. இந்தியாவின் முக்கியமான 123 நீர்நிலைகளில் தண்ணீர் குறைவில்லாமல் கிடைக்கப் பெற ஜெபிப்போம்.

6. கோடைக்காலங்களில் யாரையும் எந்த நோய்களும் தாக்காதபடி தேவ பாதுகாப்பு உண்டாக ஜெபிப்போம்.

7. உலகம் முழுவதும் சுமார் 220 கோடிக்கும் அதிகமான மக்கள் சுத்தமான தண்ணீர் இல்லாததினால், பலவிதமான நோய்களினால் பாதிக்கப்படுவது தடுக்கப்பட ஜெபிப்போம்.

8. தண்ணீர் வீணாகாமல் தேக்கி வைக்கவும், நீர் ஆதாரங்கள் பெருகவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க ஜெபிப்போம்.

9. சோமாலியா தேசத்தில் 40 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு வறட்சி நிலவுவதால் இளம் பிள்ளைகள் உயிரிழப்புகள் அதிகரித்து வருகிறது. அத்தேசத்தின் வறட்சி மாறி, வேண்டிய உதவிகள் கிடைக்கப்பெற ஜெபிப்போம்.

10. சோமாலியாவில் தீவிரவாதிகளின் தாக்குதல்கள் நடைபெறுவது தடுக்கப்படவும், அத்தேச மக்கள் பாதுகாக்கப்படவும் ஜெபிப்போம்.

11. கடந்த சில வருடங்களில் மட்டும், உள்நாட்டு சண்டைகள், மழையின்மையால் வறட்சியால் கடும் பஞ்சம் ஏற்பட்டு இரண்டரை இலட்சத்திற்கும் அதிகமானோர் பட்டினியால் மரித்துள்ளனர். அத்தேசத்தில் தேவன் செழிப்பை கட்டளையிட ஜெபிப்போம்.

12. பஞ்சம், பட்டினி, பாலியல் வன்முறை, வறட்சி, ஊட்டச்சத்தின்மை போன்றவற்றால் வாழ முடியாமல் தவிக்கும் சோமாலியா தேசத்து மக்களுக்கு தேவன் இரக்கம் செய்யும்படி ஜெபிப்போம்.

13. சோமாலியா தேசத்து ஜனங்கள் தேவனை தேடும்படிக்கும், சாபத்தால் கட்டப்பட்டிருக்கும் இத்தேசத்தில் உயிர்மீட்சி உண்டாகவும் ஜெபிப்போம்.

14. உலகளவில் வருடத்திற்கு 1.10 கோடி கருகலைப்புகள் நடைபெறுவது தடுக்கப்படவும், இதன்மூலம் அநேக பெண்கள் மரணமடைவது தடுக்கப்படவும் ஜெபிப்போம்.

15. சீனாவில் 40 ஆண்டுகளில் 33 கோடி கருகலைப்புகள் நடைபெற்றுள்ளன. சீன அரசாங்கம் நல்ல முடிவு எடுத்து கருகலைப்பை தடை செய்ய ஜெபிப்போம்.



நீங்கள் ஜெபம்பண்ணும்போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும்

மாற்கு 11:24

16. பணத்திற்காக கருக்கலைப்பு செய்யும் மருத்துவர்கள் மனந்திரும்பும்படியாகவும், கருக்கலைப்பு எல்லா தேசங்களையும் விட்டு அகற்றப்படவும் ஜெபிப்போம்.

17. சிறுவயதிலேயே அதிகமாக வலைத்தளங்களை பயன்படுத்தி தவறான பாதையில் சென்று கொண்டிருக்கும் சிறுவர், சிறுமியர், வாலிபர்களை கர்த்தரின் கரம் மீட்க ஜெபிப்போம்.

18. சமூக வலைத்தளங்களை சிறுவர்கள் மற்றும் வாலிபர்கள் பயன்படுத்துவதற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்படவும், பெற்றோர் பிள்ளைகளுக்குள் நல்உறவு உண்டாகவும் ஜெபிப்போம்.

19. இந்தியாவில் நிலக்கரிப் பற்றாக்குறையால் மின்சார உற்பத்தி தடைபடுகிறது. நிலக்கரி உற்பத்தி சரியான முறையில் நடைபெறவும் ஜெபிப்போம்.

20. மின்நிலையங்களில் போதிய அளவு நிலக்கரி நடைபெறவும் உற்பத்தி செய்யவும், மின்சாரம் தடையில்லாமல் கிடைக்கப் பெறவும் ஜெபிப்போம்.

21. நாட்டில் அதிகரித்து வரும் மின்சார தேவையைக் கருத்தில் கொண்டு பல்வேறு மின்உற்பத்தி திட்டங்களை அரசாங்கம் மேற்கொள்ள தீவிரம் காட்ட ஜெபிப்போம்.

22. இந்தியாவில் உள்ள 173 அனல் மின்உற்பத்தி நிலையங்களிலும், நிலக்கரி தட்டுப்பாடில்லாமல் கிடைக்கவும், நிலக்கரி விநியோகத்தில் ஏற்படும் தடங்கல்கள் முற்றிலும் மாறவும் ஜெபிப்போம்.

23. நிலக்கரி சுரங்கங்களில் இருந்து மின்உற்பத்தி நிலையங்களுக்கு நிலக்கரியைக் கொண்டு செல்ல போதுமான சரக்கு இரயில்கள் கிடைக்கப்பெற ஜெபிப்போம்.

24. மின்சாரம் தடையில்லாமல் கிடைக்க அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுத்து, தங்குதடையின்றி மின் விநியோகம் நடைபெற ஜெபிப்போம்.

25. திருச்சபைகளுக்குள், ஊழியர்களுக்குள் அன்பு, ஐக்கியம் வளர்ந்தோங்க, ஒருவரையொருவர் தாங்குகிறவர்களாக மாற ஜெபிப்போம்.

26. அனைத்து சபை விசுவாசிகளுக்குள்ளும், எழுப்புதலின் அக்கினி போடப்படவும், பெந்தெகொஸ்தேயின் அபிஷேக அனுபவம் உண்டாக ஜெபிப்போம்.

27. சிறுவர்கள், வாலிபர்கள் மத்தியில் எழுப்புதல் உண்டாகவும், வாலிபர்கள் மத்தியில் ஜெப ஆவி ஊற்றப்படவும் ஜெபிப்போம்.

28. சபைகளுக்குள் கிரியை செய்யும் பிரிவினையின் ஆவிகள் கட்டப்படவும், விசுவாசிகளுக்கும், மேய்ப்பர்களுக்கும் ஒருமனம் உண்டாகவும் ஜெபிப்போம்.

29. தேசம் முழுவதும் இருக்கிற அனைத்து திருச்சபைகளும் சுவிசேஷத்தை தீவிரமாய் அறிவிக்க, இரட்சிப்பு உண்டாக, சீஷர்களை உருவாக்குகிற சபைகளாக மாற ஜெபிப்போம்.

30. இரட்சிக்கப்பட்ட வாலிபர்கள் ஊழியம் செய்யவும், ஆத்தும பாரம் உண்டாகவும், சபைகள் வளர்ந்து பெருகவும், எழுப்புதல் உண்டாகவும் ஜெபிப்போம்.

31. சபைகள் மற்றும் ஊழியர்களுக்கு எதிராக கிரியை செய்யும் சாத்தானின் திட்டங்கள் அழிக்கப்பட ஜெபிப்போம்.

*தினமும் ஒரு நிமிடம் எடுத்து அன்றைய தேதியில் கொடுக்கப்பட்டுள்ள ஜெபக்குறிப்புக்காக முழுமனதோடு கருத்தாய் ஜெபியுங்கள்!*

சிந்தனை சிதறல்: பெனிட்டா

# ஈசாக்கு பிறப்பதற்கு ஏற்பட்ட தாமதம்!



தேவன் ஆபிரகாமுக்கு 75 வயதில், 'நீ வானத்தை அண்ணாந்து பார், நட்சத்திரங்களை எண்ண உன்னாலே கூடுமானால், அவைகளை எண்ணு' என்று சொல்லி, பின்பு அவனை நோக்கி: 'உன் சந்ததி இவ்வண்ணமாய் இருக்கும்' (ஆதி. 15:5) என்று ஒரு வாக்குத்தத்தத்தைக் கொடுத்தார். ஆண்டவர் வாக்குத்தத்தம் கொடுத்த உடனேயே அது நிறைவேறவில்லை. 25 ஆண்டுகள் ஈசாக்கின் பிறப்பிற்காக காத்திருந்தார். ஏன் ஆண்டவர் 25 ஆண்டுகள் தாமதம் செய்கிறார். இந்த காலதாமதமான 25 ஆண்டுகளில் ஆபிரகாமும், சாராளும் ஆண்டவருடைய வாக்குத்தத்தத்தை நம்புவதில் சற்று தடுமாற்றம் அடைந்திருந்தார்கள். அதன் விளைவாகத்தான் ஆபிரகாமிற்கு ஆகார் மூலமாக இஸ்மவேல் பிறக்கிறான். ஆபிரகாமின் விசுவாசத்தை தேவன் சோதிக்கிறார். இந்த வாக்குத்தத்தம் நிறைவேற ஆபிரகாம் 25 ஆண்டுகள் காத்திருந்தான். கர்த்தர் கொடுத்த வாக்கின்படி, ஆபிரகாம் முதிர்வயதாயிருக்கையில் சாராள் கர்ப்பவதியாகி, தேவன் குறித்திருந்த காலத்திலே அவனுக்கு ஒரு குமாரனைப் பெற்றாள் (ஆதி. 21:1,2).

**அன்பான வாலிபர்களே! தேவன் உங்களுக்கு ஒரு வாக்குத்தத்தம் பண்ணினால் அதை நிறைவேற்றும் வரை காத்திருக்க வேண்டும். ஆபிரகாம் 25 ஆண்டுகள் காத்திருந்து தான் ஈசாக்கை பெற்றெடுத்தார். தாமதித்தாலும் ஆண்டவரின் வாக்குத்தத்தம் நிறைவேறும்.**



# யோசேப்பு கனவு நிறைவேறுவதில் ஏற்பட்ட தாமதம்!

சூரியன், சந்திரன் நட்சத்திரங்கள் தன்னை வணங்கியதாக ஒரு கனவு கண்டதாக தன் சகோதரர்களிடமும், தகப்பனிடமும் யோசேப்பு சொல்கிறான். இதனால் சகோதரர்கள் பகைத்து, அவரை கொலை செய்யும்படி ஆலோசனை பண்ணுகிறார்கள். ஆனால் ஒரு சகோதரனின் நிமித்தம் எகிப்தின் ராஜா போத்திபார் 20 வெள்ளிக்காசுக்கு வாங்கி எகிப்துக்கு கொண்டு போகப்படுகிறார். ஒருநாள் போத்திபாரின் மனைவியால் பொய் குற்றம் சாட்டப்பட்டு யோசேப்பு சிறைச்சாலைக்கு அனுப்பப்படுகிறார். பார்வோனால் குற்றம் சாட்டப்பட்டு சிறைக்கு சென்ற இரண்டு வேலைக்காரர்கள் ஒரு கனவு காண்கிறார்கள். அதற்கு அர்த்தத்தை யோசேப்பு சொல்கிறார். அதன்பிறகு எகிப்தின் மன்னன் பார்வோன் ஒரு கனவு காண்கிறான். அதன் அர்த்தத்தை எகிப்தின் மந்திரவாதிகளாலும், ஜோதிடர்களாலும் கூற முடியவில்லை. யோசேப்பு அதன் அர்த்தத்தை விளக்கி கூறுகிறார். யோசேப்போடு தேவன் இருக்கிறார் என்பதை பார்வோன் அறிந்து அவனை எகிப்தின் பிரதான மந்திரியாக உயர்த்துகிறார். யோசேப்பு கண்ட கனவு நிறைவேறுவதற்கு 21 ஆண்டுகள் காத்திருக்க வேண்டியிருந்தது.

**அன்பான வாலிபர்களே! யோசேப்பு தன் சொந்த சகோதரர்களால் பகைக்கப்படுகிறார், அடிமையாக விற்கப்படுகிறார், பொய் குற்றச்சாட்டுக்கு ஆளாகி சிறைச்சாலைக்கு செல்கிறார். ஆனால் தரிசனம் நிறைவேற 21 ஆண்டுகள் காத்திருந்து மகிமையான ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டார்.**

# லாசருவின் உயிர்தெழுதலில் ஏற்பட்ட தாமதம்!

இயேசு நேசித்த லாசரு வியாதிப்பட்டிருக்கிறான் என்ற செய்தி இயேசுவுக்குத் தெரிந்தும் உடனே அவர் போகவில்லை. இந்த வியாதி மரணத்துக்கு ஏதுவாயிராமல் தேவனுடைய மகிமை விளங்குவதற்கு ஏதுவாயிருக்கிறது, தேவன் இதன் மூலம் மகிமைப்படுவார் என்று லாசரு வியாதிப்பட்டிருந்த செய்தியை அறிந்தும் இரண்டு நாட்கள் தாமதமாகவே இயேசு சென்றார். அதற்குள் லாசரு மரித்து அடக்கம் பண்ணப்பட்டு நான்கு நாட்கள் ஆகிவிட்டது. இயேசு அவர்கள் துக்கத்தில் பங்கெடுத்து, லாசருவின் மரணத்தை நினைத்து கண்ணீர் விட்டார். பின்னர் கல்லறைக்கு சென்று கல்லை எடுத்துப் போடுங்கள் என்று சொன்னதும், மார்த்தாள் 'நாலு நாளாயிற்றே நாறுமே' என்றாள். இயேசு கூறியதை விசுவாசித்து அவர்கள் கல்லை புரட்டி போட்ட போது, மரித்து அடக்கம் பண்ணப்பட்ட லாசரு கல்லறையை விட்டு உயிரோடு எழுந்து வந்தான். தேவ நாமம் மகிமைப்பட்டது. இதனால் யூதர்களில் அநேகர் இயேசுவிடம் விசுவாசம் வைத்தார்கள் (யோவான் 11:1-45).

**அன்பான வாலிபர்களே! ஒரு காரியம் தாமதித்தால் நாம் உடனே பொறுமையிழந்து போகிறோம். லாசரு வியாதியோடு இருக்கும் போது, இயேசு சுகம் கொடுத்திருந்தால், இப்படி ஒரு மகிமையான அற்புதத்தைப் பார்த்திருக்க முடியாது. தேவ நாமம் மகிமைப்படுவதற்காக தாமதம் செய்வார். தாமதம் தடையல்ல என்பதை அறிந்து கொள்ளுங்கள்!**



# தாவீதை இராஜாவாக நியமிப்பதில் ஏற்பட்ட தாமதம்!

சாமுவேல் தீர்க்கதரிசி தாவீதை இஸ்ரவேலின் இராஜாவாக அபிஷேகம் பண்ணினான். அதை உறுதிப்படுத்தும் விதமாக தாவீது கோலியாத்தைக் கொன்று வீழ்த்தி ஒரு சாதனை புரிகிறான். ஆனால் அரண்மனையிலிருந்து விரட்டப்படுகிறான். வனாந்திரங்களிலும், குகைகளிலும் வாழும் வாழ்க்கைக்கு தள்ளப்படுகிறான். என்னை இஸ்ரவேலுக்கு இராஜாவாக அபிஷேகம் பண்ணினது உண்மையானால் ஏன் எனக்கு இந்த வனாந்திர வாழ்க்கை என்று தாவீது யோசித்திருக்கலாம். ஆனால் இராஜாவாக மாறுவதற்கு முன்பே தாவீதின் எதிரியாகிய சவுலை தாவீதின் கையில் ஒப்புக்கொடுத்ததன் மூலம் தாவீதை சோதிக்கிறார். தாவீதைத் தேடி வந்த சவுல் தாவீதின் கையில் சிக்கிக் கொள்ளுகிறான். தாவீதின் நிலையில் எந்த மனிதன் இருந்திருந்தாலும் சவுலைக் கொல்லத்தான் பார்த்திருப்பார்கள். ஆனால் தாவீதோ ஒருமுறை அல்ல, இரண்டு முறை அதற்கான வாய்ப்பு வந்த போதும் சவுலை கொல்ல மறுத்து விட்டான். சவுலை மனப்பூர்வமாக மன்னித்தார். அதைப் பார்த்த பின்பு தான் ஆண்டவர் தாவீதை இராஜாவாக நியமித்தார் (1 சாமு. 5:4,5).



**அன்பான வாலிபர்களே! அபிஷேகம் பண்ணப்பட்ட தாவீதின் வாழ்க்கையில் வந்த சோதனையை பார்த்தீர்களா? ஆண்டவர் சில நேரங்களில் பலவிதமான சோதனைகளுக்குட்படுத்திதான் நம்மை உயர்த்துவார். அது தாமதம் என்றெண்ணி ஆண்டவரை விட்டு விலகி விடாதீர்கள். தாமதித்தாலும் கர்த்தர் வாக்கினால் சொன்னதை தம்முடைய கரங்களினால் நிறைவேற்றுவார்!**

# Revival iGNiTERS
## Monthly Fellowship

வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் அனல் கொண்டு எழும்பவும், வேதத்தின் ஆழமான இரகசியங்களை அறியவும், தங்கள் தேசத்திற்காய் கூடி ஜெபித்து பெலப்படும் ஓர் இடமாகவும் **IGNITERS** கூடுகை அமைகிறது. நீங்களும் இக்கூடுகையில் பங்குபெற்று பெலன் அடையலாமே ! உன்னை பெலப்படுத்திக் கொண்டு, பிறரையும் பெலப்படுத்த

**ஆயத்தப்படு ! ஆயத்தப்படுத்து !**

## EVERY 1st SUNDAY (7th May)

**MUMBAI – DHARAVI (5PM – 8PM)**
Gethsemane Prayer Centre
2nd Floor, Above Balakrishna Farsan Mart,
Opp. Apna Restaurant,
Near Kamarajar School,
90 Feet Road,
9004882470

**VELLORE (3PM)**
Gethsamane Prayer Center,
Ajantha Mahal,
# 3, 6th West Cross Road,
Gandhi Nagar
9442885315 | 9786379556

**TIRUPUR (4PM – 6:30PM)**
Gethsamane Prayer Center,
#62, 2nd Floor,
Benny Kumaran Main Road.
9442082200

**TUTICORIN (3PM – 5:30PM)**
Gethsamane Prayer Center,
Jehovah Jireh
Towers, 51/8D/3, 1st Floor
Tiruchendur Road,
Muniasamypuram Land mark :
South Police Station to Kamaraj College Rd. 9442885315

**TIRUPATI (3PM)**
Old Community Hall,
West Church
9985033401 | 9442885315

**SANKARANKOIL (2:30PM – 5PM)**
Gethsamane Prayer Center,
Sekihnah Mahal,
Mullai Nagar.
9750955548 | 8344949555

## EVERY 2nd SATURDAY (13th May)

**BANGALORE (3PM-5PM)**
Telugu Church, #21,
Nethaji Road, Railway Line
Pulikeshi Nagar, Frazer Town.
Opp: BWSSB Office.
9962085523 | 9591077110

**MADURAI (3PM -5:30PM)**
American College Higher Secondary School,
AC School
Backside to Arumugam Hotel,
Tallakulam Bus Stop.
9750955548 | 9344759316

## EVERY 2nd SUNDAY (14th May)

**AMBUR (3PM-6PM)**
Concordia Hr.Sec. School,
Opp Rly.Station
9597927799 | 9442885315

**MUMBAI - THANE (4PM – 6:30PM)**
9004882470

**POLLACHI (3PM TO 6PM)**
Gethsamane Prayer Center,
Grace Auto 1st floor,
163 , raja mill road pollachi,
9486037586 | 9487856205

**THANJAVUR (3PM)**
Gethsamane Prayer Center,
Near Balaji Nagar Bus Stop,
18B, TPS Nagar, MC Road
9444381971 | 9488475315

**KOVILPATTI (3PM -5:30PM)**
St. Paul's Matriculation School
9677859766 | 9787322334

**ALANGULAM (2:30PM)**
P.M.V. Packiyavathy Building,
R.A. Nursing Institute,
SCV Computers (top Floor)
Main Road,
Near Union Office Opposite
9965377427 | 9750955548

**THENI (2:30PM – 5PM)**
Gethsamane Prayer Center,
#203, Madurai Road,
Opp. Anantham Silk
Dr. Kamaraj Hospital,
1st Floor
9750955548 | 9976766422

**SURANDAI (2:30PM)**
Jawarhalal Middle School
9443962141 | 9750955548

**SIVAKASI (3PM -5PM)**
Gethsamane Prayer Center,
HOREB Complex, 1st Floor,
P K N Road, (Rathna vilas Stop)
9677858766 | 9442906567

**SATHANKULAM (3PM -5:30PM)**
Hendry Matric Higher Secondary
School Mela Sathankulam.
9442885315

**CHENGALPET (3PM – 5:30PM)**
Blessing School,
Tirukazhukundram Road
9488475315

**VILLUPURAM (3PM – 5:30PM)**
Gethsamane Prayer Center,
HH Complex, Namnadu Textiles
Opp., Shanthi Theater Rd
8870517324 | 834411022

## EVERY 3rd SUNDAY (21st May)

**TIRUNELVELI (2:30 PM)**
Gethsamane Prayer Center,
Shah Complex, #43/R4,
Rajendra Nagar, Trivandrum Road
9750955548 | 9488212915

**COIMBATORE (4 PM)**
Gethsamane Prayer Center,
#90, 1st Floor, Arts College Road,
Near Charan Tower,
0422 – 2309040 | 8903405315

**TRICHY (3 PM)**
Gethsamane Prayer Center,
22A, 1st Floor Thennur High
Road, Near KMC Bus Stop,
Thennur.
9488475315

**JEBAMALAI (2 PM)**
Keelamathapuram,
Kadaiyam (via)
Tenkasi Dist.
8300131000 | 9750955548

**CHENNAI (3 PM)**
VGP Victory House, Mount Road
9488475315

**NALUMAVADI (3PM -5:30PM)**
Tabernacle of God,
Nalumavadi
9442885315

**TIRUVARUR (3:30PM)**
Gethsamane Prayer Center,
1A/25B, Bypass Road
(opp Arasu Autos)
9976766322 | 7373374733

**RANIPET (3PM-6PM)**
Gethsamane Prayer Center,
MBT Road,
Navalpur.
9500283179 | 9442885315

**ERODE (4PM – 6:30PM)**
Gethsamane Prayer Center,
#216, 1st Floor,
Near Fire Service, Gandhiji Road
9750722000

**NAGERCOIL (3PM TO 6PM)**
Gethsamane Prayer Center,
NO: 1055 K.P ROAD,
Milk Depot Junction, Nagercoil
7598155503 | 9442885315

**PONDICHERRY (3PM TO 6PM)**
Gethsamane Prayer Center,
Kottupalayam Lawspet,
opp. Latha Steel, E C R Road.
8344433800 | 9442885315

**DINDUGAL (3PM TO 6PM)**
Sophia School, Govt Hospital
Emergency Block opp
9043422612 | 9715495621

**CHITTOOR (3PM TO 6PM)**
St. Lukes Telugu Church
9487734603

## EVERY 4th SATURDAY (27th May)

**PERAMBALUR (5PM -8PM)**
Gethsamane Prayer Center,
M K Complex, 71,
Venkatesapuram,
Near Bank of Baroda,
Trichy Main Road.
9788788512

## EVERY 4TH SUNDAY (28th May)

**THIRUVALLUR (3PM -5:30PM)**
Gethsamane Prayer Center,
H S R Tower, 2nd Floor,
Near CSI Gowdi Church
9488475315

**KRISHNAGIRI (3 PM – 5PM)**
Gethsamane Prayer Center,
Near Arun Hospital
Royakottai Road.
9962085523 | 9524999711

**KARUR (3PM-5:30PM)**
CSI Boys High schools,
Jawahar Bazzar,
Bunglaw Street, Karur.
9489775075

இயேசு விடுவிக்கிறார்
வாலிபர் உலகம்
தொலைக்காட்சி நிகழ்ச்சி
Sathiyam
சத்தியம் TVயில்
சனிக்கிழமை தோறும்
6:30 மணி
YouTube
Comforter DIGITAL CHANNEL
காலை 7 மணிக்கு
YouTube மற்றும்
Comforter TVயிலும் பார்க்கலாம்.
வாலிபர்களே! உங்கள் நண்பர்களுக்கும் இந்த நிகழ்ச்சியை அறிமுகப்படுத்துங்கள். அதுமட்டுமல்லாமல் இந்நிகழ்ச்சி மூலம் நீங்கள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்!!
9750955547

LIVE STREAMING
Revival IGNITERS
ON SUNDAY 28th MAY
TIME: 3:00 PM - 5:00 PM
IGNITERS, MONTHLY YOUTH FELLOWSHIP IS TELECASTED LIVE ONLINE IN YOUTUBE AND FACEBOOK ON LAST SUNDAY OF EVERY MONTH





# நிபந்தனைகளும் வாக்குத்தத்தங்களும்

## யோசுவா

சிறப்பு கட்டுரை: ஜெயசீலன்

அன்பு தம்பி, தங்கச்சி! எல்லோருக்கும் அன்பின் வாழ்த்துக்கள். நிபந்தனைகளும் – வாக்குத்தத்தங்களும், இந்த வரிசையில் இம்மாதம் யோசுவா என்ற வாலிபனைப் பற்றி அறிந்துகொள்வோம். யோசுவா என்பதற்கு 'யேகோவா மீட்கிறார்' என்று பொருள்.

மோசே கர்த்தரின் கட்டளைப்படி, யோசுவாவை தனக்குப்பின் இஸ்ரவேலுக்குத் தலைவனாக நியமித்தார். இவருக்கு முன்பாக நிறைய TASKs இருந்தன. யோர்தான் நதியை கடப்பது தான் முதல் TASK. யோர்தானை கடக்க யோசுவா 3: 5ல் ''உங்களைப் பரிசுத்தம் பண்ணிக்கொள்ளுங்கள்; நாளைக்குக் கர்த்தர் உங்கள் நடுவில் அற்புதங்களைச் செய்வார்'' என்று நிபந்தனையோடு கூடிய ஒரு வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த யோர்தான் நதி அறுப்புக் காலத்தில் கரை புரண்டு ஓடுமாம் (யோசுவா3:15). சாதராணமாக ஓடும் நதியைக் கடந்து செல்வதே மிகக் கடினமாக இருக்கும். கரை புரண்டு வெள்ளப் பெருக்கெடுத்து ஓடிவரும் இந்த நதியை எப்படிக் கடந்து செல்வது என அனைவரும் கலங்கித் திகைத்திருக்கக் கூடும். உடன்படிக்கைப் பெட்டியைச் சுமந்து சென்ற ஆசாரியர்களின் உள்ளங்கால்கள், யோர்தான் நதியில் பட்டது.

அவ்வளவு தான், கரைபுரண்டு வந்த யோர்தான் நதி ஒரு குவியலாகக் குவிந்து நின்றதாம் (யோசுவா3:15, 16). அதோடு மறுபுறம் யோர்தான் நதி பிரிந்து பின்னோக்கி ஓடியதாம். மக்கள் அனைவரும் தண்ணீரற்ற உலர்ந்த தரை வழியாய்க் கடந்து போனார்கள் என வேதம் கூறுகிறது.

கல், மண், காய்கறி போன்றவற்றை குவித்து வைத்திருப்பதை நாம் பார்த்திருப்போம். திடப்பொருள்களை மட்டுமே குவித்து வைக்க முடியும். திரவப்பொருள்களை குவித்து வைக்க முடியாது. ஆனால் நம் தேவாதி தேவனோ, தன் ஜனங்கள் கடந்து போவதற்குத் தடையாய் இருந்த தண்ணீரைக் குவியலாக்கினார். அல்லேலூயா!

### யோர்தான் பிரிந்த ரகசியம்

கரை புரண்டு வந்த யோர்தான் நதி ஆசாரியர்களின் உள்ளங்கால்கள் பட்ட உடனே பிரிந்து ஓடக் காரணம், ஆசாரியர்களுடைய உள்ளங்கால்களின் வல்லமையால் அல்ல. அவ்வளவு வலிமை அவர்கள் பாதங்களுக்கு இல்லை. ரகசியம் என்னவென்றால், அவர்கள் சுமந்து சென்ற உடன்படிக்கை பெட்டிக்குள் இருந்த கற்பலகைகளில் எழுதப்பட்டிருந்த கர்த்தருடைய கட்டளைகளே (2 நாளா 5:10). தேவ வார்த்தைகள் பொறிக்கப்பட்டிருந்த அந்த கற்பலகைகள் கொண்ட பெட்டியை சுமப்பது தேவனையே சுமப்பதற்கு சமம். ஏனெனில் நம்முடைய தேவன் ஆதியிலே வார்த்தையாய் இருந்தவர். இங்கு நாம் கவனிக்க வேண்டிய ஒரு காரியம், மகிமையும் கனத்திற்கும் உரிய அந்த உடன்படிக்கை பெட்டியை சாதாரணமானவர்களால் சுமக்க முடியாது. அவ்வளவு ஏன் தொடக்கூட முடியாது. அப்படித் தொட்ட ஊசாவை தேவன் அடித்ததினால், அவன் அந்த இடத்திலேயே செத்து மடிந்ததை நாம் அறிவோம் (2 சாமுவேல் 6: 6, 7). ஆகையால் உடன்படிக்கை பெட்டியை சுமந்து

செல்லும் ஆசாரியர்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களாகவும் மிகவும் பரிசுத்த முள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். இதனால் தான் யோசுவா 3:5ல், ''உங்களைப் பரிசுத்தம் பண்ணிக்கொள்ளுங்கள்; நாளைக்குக் கர்த்தர் உங்கள் நடுவில் அற்புதங்களைச் செய்வார்'' என்று கூறினார் யோசுவா. தேவன் யோசுவாவைக் கொண்டு பேசின இந்த வார்த்தைகளுக்கு முழு இஸ்ரவேலரும், குறிப்பாக ஆசாரியர்களும் அன்று முழுவதும் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு தகன பலிகளை செலுத்தி தேவ சமூகத்தில் தரித்திருந்து தங்களை பரிசுத்தம் செய்திருக்கக்கூடும். பரிசுத்தமுள்ள தேவனின் பிரசன்னத்தை சுமக்கும் ஆசாரியர்கள், தங்களை பரிசுத்தமாய் காத்துக் கொண்டு தேவனுடைய பெட்டியை சுமந்து, யோர்தானில் தங்கள் உள்ளங்கால்களை பதித்ததினால் மட்டுமே அங்கு ஒரு வரலாறு போற்றும் அற்புதம் நிகழ்ந்தது. தேவன் தாம் சொன்னபடியே யோர்தானை பிளந்து, ஒரு மாபெரும் அற்புதத்தை செய்தார்.

## உடன்படிக்கைப் பெட்டி

அன்பானவர்களே! அன்று தேவனுடைய வார்த்தையையும் பிரசன்னத்தையும் உடன்படிக்கை பெட்டிக்குள் வைத்து ஆசாரியர்கள் சுமந்தனர். இன்று நாம் தான் அந்த பெட்டி. இயேசு தெய்வம் உங்களோடு வரப் பிரியப்படுகிறார். உங்கள் சரீரமாகிய ஆலயத்திற்குள், இருதயமாகிய உடன்படிக்கை பெட்டிக்குள், வார்த்தையாய் வாழும் தெய்வத்தை, சுமக்க நீங்கள் ஆயத்தமா? இன்று அநேகரது சரீரமாகிய ஆலயம் பரிசுத்தம் இன்றி கெட்ட எண்ணங்களாலும், கெட்ட வார்த்தைகளாலும் நிறைந்து தீட்டுப்பட்டு கிடக்கின்றது. ''வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம்பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக்கொள்ளுகிறதினால்தானே'' என்று 119ம் சங்கீதம் 9ம் வசனம் சொல்கிறது.

ஆனால் இன்று அநேகருக்கு வேதத்தை வாசிக்க நேரமில்லை. வயதானால் பார்த்துக் கொள்ளலாம் என்று அலட்சியப்படுத்துகிறீர்கள். தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை பார்ப்பதிலும், இன்டர்நெட், பேஸ்புக் என வாலிபப் பிள்ளைகளாகிய உங்களில் அநேகரது மனமகிழ்ச்சி அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. நீங்கள் கர்த்தருடைய வார்த்தையை சுமக்கும் உடன்படிக்கை பெட்டியாக இருந்தால் மட்டுமே உங்கள் வீடு ஆசீர்வதிக்கப்படும் கால் பதிக்கும் இடமெல்லாம் அற்புதங்கள் நிகழும். உங்களுக்கு முன்பாக கரை புரண்டு ஓடிவரும் யோர்தான் நதிகள் பின்னிட்டு திரும்பும். மூர்க்கமாய் உங்களை எதிர்த்து நிற்கும் மனிதர்களின் சூழ்ச்சிகள் வாய்க்காமல் போகும். ஆனால் அதற்கு நீங்கள் வேத வசனத்தினால் உங்களை பரிசுத்தமாக காத்துக் கொள்ள வேண்டும்.

**அன்பான வாலிபர்களே! அன்று இஸ்ரவேல் ஜனங்களும் உடன்படிக்கை பெட்டியை சுமக்கும் ஆசாரியர்களும் தங்களை பரிசுத்தம் பண்ணிக் கொண்டதினால், தேவன் யோர்தானை பிளந்து அற்புதம் செய்தார். நீங்களும் தினந்தோறும் கர்த்தரின் வார்த்தையினால் உங்களை பரிசுத்தம் பண்ணி, கறைதிரையற்றவர்களாய் உங்களை காத்துக் கொள்ளும் போது, உங்கள் வாழ்வை இத்தோடு அழித்து விட வேண்டும் என்று பொங்கி கரை புரண்டு வரும் யோர்தான்களை தேவன் குவியலாக நிற்கும்படி செய்வார். யோர்தான் நதிகள் உங்களுக்கு முன் பின்னோக்கி ஓடி உங்களுக்கு வழி விடும். கலங்காதிருங்கள்! வார்த்தையாய் இன்றும் நம்மில் வாழும் ஆண்டவர் இயேசு உங்களோடு வாழ இடம் கொடுங்கள். அவரை பரிசுத்த இருதயத்தோடு சுமக்க உங்களை அர்ப்பணியுங்கள். கர்த்தர் விரும்பாத எல்லா பாவங்களையும் அருவருப்புகளையும் உங்களை விட்டு அகற்றி உங்களை பரிசுத்தம் பண்ணிக் கொள்ளுங்கள். கர்த்தர் உங்கள் நடுவில் அற்புதம் செய்வார்!** ■



வரலாறு தொகுப்பு: காட்வின்



# நெல்சன் மண்டேலா

## Nelson Mandela

காழ்ப்புணர்ச்சியும், பழிவாங்கும் குணமும் ஒரு தனி நபரிடமோ அல்லது ஒரு தேசத்திடமோ இருந்தால் அந்நபரோ, அந்த தேசமோ வளர முடியாது. ஆனால் அனைவரையும் அரவணைக்கும் குணம் ஒருவரிடம் இருந்தால் ஒரு சாம்ராஜ்யத்தையே படைக்கலாம். அப்படி ஒரு சாம்ராஜ்யத்தை உருவாக்கியவர் தான் நெல்சன் மண்டேலா. தென்னாப்பிரிக்காவில் மக்களாட்சி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் குடியரசு தலைவர் ஆவார். அதற்கு முன்னர் நிறவெறிக்கு எதிராக போராடிய முக்கிய தலைவர்களுள் ஒருவராக இருந்தார். பிறகு ஆப்பிரிக்க மரபுசாரா கொரில்லா போர்முறை தாக்குதலை நிறவெறி அரசுக்கு எதிராக நடத்தினர். இதற்காக மண்டேலாவிற்கு 27 ஆண்டு சிறைவாசம் கொடுக்கப்பட்டது.



உலக வரலாற்றிலேயே மண்டேலாவைப் போல 27 ஆண்டு காலம் சிறையில் வாடிய தலைவர்கள் கிடையாது. பல ஆண்டுகள் அவரை தனிமைச் சிறையில் அடைத்து கொடுமை செய்தது தென்னாப்பிரிக்க அரசாங்கம். 1988ம் ஆண்டு கடுமையான காச நோய் ஏற்பட்டு, மரணத்தின் எல்லைக்கே சென்றார். அதனால் வீட்டுச்சிறைக்கு மாற்றப்பட்டார். அப்போதைய தென்னாப்பிரிக்கா அரசின் தலைவரான பிரெட்ரிக் வில்லியம் டெக்ளார்க் ஆப்பிரிக்கா தேசிய காங்கிரஸ் மீதான தடையை நீக்கியதால், 1990ல் மண்டேலா சிறையிலிருந்து விடுதலை பெற்றார். விடுதலை பெற்றபோது அவருக்கு வயது 71. 1994ம் ஆண்டு மே 10ம் தேதி அவர் தென்னாப்பிரிக்க அதிபர் ஆனார்.

## தென் ஆப்பிரிக்க முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலா கூறுகிறார்...

*நீண்ட நெடிய போராட்டத்திற்குப் பிறகு, நான் ஜனாதிபதியான பின், ஒருநாள் நான் எனது முதல் கட்ட பாதுகாப்புப் படையினருடன் நகரத்தில் உள்ள ஒரு உணவகத்துக்குச் சென்றிருந்தேன். அங்கு ஒரு உணவகத்தில் அவரவர் தமக்கு விரும்பிய உணவுக்கு ஆர்டர் கொடுத்து விட்டு அமர்ந்திருந்தோம். அப்போது எனக்கு எதிர் மேசையில் ஒருவர் தனியாக உணவு அருந்திக்கொண்டிருந்தார். எனது படைவீரனை அனுப்பி, அவரை எங்களுடன் வந்து ஒன்றாக உணவருந்தும்படி சொன்னேன்.*

*அவரும் தயக்கத்தோடு தனது உணவை எடுத்துக் கொண்டு எங்களோடு வந்து அமர்ந்து கொண்டார். எல்லோரும் உணவு சாப்பிட்டதும் அவரும் புறப்பட்டார். எனது படை வீரன் என்னிடம், அந்த மனிதர் பார்ப்பதற்கு மிகவும் நோய்வாய்ப்பட்டவராகத் தெரிகிறார். அவர் உண்ணும் போது கைகள் மிகவும் நடுங்கியதாக சொன்னான்.*

*அப்போது நான் குறுக்கிட்டு, உண்மை என்ன தெரியுமா? நான் சிறையில் இருந்த போது, இந்த மனிதர் தான் எனக்கு சிறைக் காவலராக இருந்தார். என்னை அடிக்கடி கொடுமைப்படுத்திக் கஷ்டப்படுத்தும் போதெல்லாம், நான் கூக்குரலிட்டு,*

*களைத்து, இறுதியில் கொஞ்சம் நீர் அருந்தக் கேட்பேன். அப்போது இந்த மனிதர் நேராக என்னிடம் வந்து என் தலை மேல் சிறுநீர் கழித்து விட்டுச் செல்வார். இப்போது இவர் என்னை இனம் கண்டு கொண்டார். நான் இப்போது தென் ஆப்பிரிக்க அதிபராக இருப்பதால், அவருக்கு பதிலடிக் கொடுப்பேன் என்று நினைத்திருப்பார். ஆனால், இது எனது பழக்கமுமல்ல. இப்படிப்பட்ட குணம் என்னுடையதுமல்ல, பழிக்குப் பழி வாங்கும் மனநிலை ஒரு போதும் ஒரு தேசத்தையோ, தனி மனிதரையோ தட்டியெழுப்பாது அது அழித்து விடும். அதேநேரம் சில விஷயங்களில் மனிதனின் சகிப்புத் தன்மை, பெரிய சாம்ராஜ்யங்களையே உருவாக்கும்* என்றார் மண்டேலா.






அன்பான வாலிபர்களே! **"பழிக்குப்பழி வாங்காமலும், உன் ஜனப்புத்திரர்மேல் பொறாமைகொள்ளாமலும், உன்னில் நீ அன்புகூருவதுபோல் பிறனிலும் அன்புகூருவாயாக;..." (லேவி. 19:18)** என்று வேதம் நமக்குத் தெளிவாக சொல்கிறது. நம் கையில் அதிகாரம் வந்தவுடன் எதையும் செய்து விடலாம் என்று, பழிக்குப்பழி வாங்காமல், நெல்சன் மண்டேலாவைப் போல எவ்வளவு சித்ரவதை செய்து, உங்களை மனமடிவுண்டாக்கியிருந்தாலும் அவர்களையும் அரவணைத்து அன்பு செலுத்துங்கள்! அப்பொழுது நீங்களும் வரலாறு படைப்பவர்களாவீர்கள்!


# வாலிபர் உலகம் பத்திரிக்கை உங்கள் கையில் உள்ளதா?



**வாலிபர்களே! இப்பத்திரிக்கை மாதந்தோறும் பெற உடனே சந்தா செலுத்தி இப்பத்திரிக்கையின் வாசகராக மாறுங்கள்.**

**சந்தா விவரம்**

- ₹ 100 - 1 வருட சந்தா
- ₹ 200 - 3 வருட சந்தா
- ₹ 1000 - ஆயுள் சந்தா

உங்கள் சந்தா தேதி முடியும் நிலையில் இருந்தால் உடனே உங்கள் சந்தாவை புதுப்பிக்க மறவாதிருங்கள்!




அனைத்து இயேசு விடுவிக்கிறார் கிளை அலுவலகங்களிலும் சந்தா செலுத்தி நீங்கள் வாலிபர் உலகம் சந்தாதாரராகலாம். உங்கள் சந்தா தேதி முடியும் நிலையில் இருந்தால் உடனே உங்கள் **சந்தாவை புதுப்பிக்க மறவாதிருங்கள்!** Mo/ Cheque / DD "Jesus Redeems Youth Ministry" என்ற பெயரில் தூத்துக்குடி அல்லது திருநெல்வேலி கிளை பெயரில் எடுத்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு உங்கள் சந்தாவை அனுப்பவும். நீங்கள் பணம் செலுத்திய பின்பு, உங்களது பெயர், முகவரி மற்றும் ரசீதை **9750955547** என்ற எண்ணிற்கு தெரியப்படுத்துங்கள்.

| | |
|---|---|
| A/c. Name | : JESUS REDEEMS YOUTH MINISTRY |
| A/c. No. | : 054100710400515 |
| BANK | : TAMILNAD MERCANTILE BANK LTD., |
| BRANCH CODE | : Prahasapuram, Nazareth |
| BRANCH CODE | : 000054 |
| IFS CODE | : TMBL0000054 |
| MICR CODE | : 627060021 |
| SWIFT CODE | : TMBLINBBTUT |

மேலும் தகவல்களுக்கு: இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம், நாலுமாவடி, தூத்துக்குடி - 628 211. *PH:* **9750955547**



# Coffee with பத்திரிக்கையாளர்

பேசலாம் வாங்க: வயலா

## நோவாவின் மனைவி

வேதாகமத்தில் தன்னுடைய பெயர் குறிப்பிடப்படாமல் தன் கணவரின் பெயரால் அறியப்பட்டிருக்கும் பெண்களுள் நோவாவின் மனைவி குறிப்பிடத்தக்கவர். இவர் அன்பு, சாந்தம், பொறுமை, தாழ்மை, கீழ்ப்படிதல், தேவ பயம், சகிப்புத் தன்மை கொண்ட கடின உழைப்பாளி. மொத்தமாக சொல்லப்போனால் ஆவியின் கனிகள் நிறைந்த குணசாலியானப் பெண். விசுவாச வீரர்கள் பட்டியலில் இடம் பெற்றுள்ள நோவாவின் வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்விற்கு பக்கபலமாக காணப்பட்ட இவரைச் சந்தித்து நம்முடைய பத்திரிக்கையாளர் நடத்தும் உரையாடலின் கற்பனைத் தொகுப்பை கீழேக் காண்போம்.

**பத்திரிக்கையாளர்:** அம்மா, வணக்கமுங்க.

**நோவாவின் மனைவி:** வணக்கம் தம்பி.

**பத்தி:** எங்கள் வாலிபத் தங்கைகள் உங்களைப் பற்றி தெரிந்துக் கொள்ள மிகவும் ஆவலா இருக்காங்க. உங்களைப் பற்றி கொஞ்சம் சொல்றீங்களா?

**நோ.ம:** சரி பா. பூமியின் மேல் மனுஷர் பெருகத் துவங்கின காலம் அது. ஆதாமுக்கு பத்தாம் தலைமுறையானவர் என் கணவர் நோவா. அவர் நீதிமானும் எல்லாக் காரியத்திலும் உத்தமனுமாயிருந்தார். அதிகாலமே தேவனைத் தேடுவார். தேவ பயத்தை எனக்கும் என் பிள்ளைகளுக்கும் கருத்தாய் போதித்திருக்கிறார். கர்த்தருக்கு கொடுக்க வேண்டிய கனத்தையும், செலுத்த வேண்டிய பலிகளையும் அதினதின் காலத்திலே சரியாக செலுத்துவார். எப்பொழுதும் தேவனோடு சஞ்சரிக்கவே விரும்புவார். அவர் மனைவியாக இப்பூமியில் வாழ்ந்ததற்காக தேவனைத் துதிக்கிறேன்.

**பத்தி:** ஜலப்பிரளயம் குறித்த உங்கள் கருத்துக்களை கூறுங்கள் அம்மா.

**நோ.ம:** தேவன் தாம் சிருஷ்டித்த எல்லா சிருஷ்டிகளிலும் மனிதனை விசேஷித்த விதமாக தன்னுடைய சாயலிலும் தன்னுடைய கரத்தினாலும் உருவாக்கினார். மனிதர்கள் தேவனோடு உறவாடவும் நேரம் செலவிடவும் தேவன் விரும்பினார். ஆனால் மனிதர்களின் இருதயம் அதில் நாட்டம் கொள்ளவில்லை. மனுஷருடைய அக்கிரமம் பூமியில் பெருகின போது, தேவன் பூமியில் மனுஷரை உண்டாக்கியதற்காக மனஸ்தாபப்பட்டார். எனவே பொல்லாத மனுஷர் நிமித்தமாக மிருகங்கள், ஊரும் பிராணிகள், ஆகாயத்து பறவைகள் யாவற்றையும் ஜலத்தினால் அழிக்கத் தீர்மானித்தார். ஆனால் கர்த்தருடைய கண்களில் என் கணவருக்கும் அவர் நிமித்தம் எங்கள் முழு குடும்பத்துக்கும் கிருபை கிடைத்தது. எனவே தேவன் ஒரு பேழையை உண்டாக்கச் சொன்னார்.

**பத்தி:** ஆமாங்க, அம்மா பேழையை எப்படி உங்கள் கணவர் உருவாக்கினார்? அதைப் பற்றி கொஞ்சம் சொல்லுங்களேன்.

**நோ.ம:** மிகவும் சிரமம் தான் தம்பி. என் கணவர் தேவ திட்டத்தைப் பற்றியும், மழையினால் ஒரு அழிவை கட்டளையிடப் போகிறார், எனவே கர்த்தருடைய பார்வையில் நீதியைச் செய்யும் படியும் எங்கள் ஜனங்களுக்கு எடுத்துக் கூறிய போது, ஒருவர் கூட அதை ஏற்றுக் கொள்ளவில்லை. மாறாக கேலி தான் செய்தார்கள். இது என் கணவரை சோர்வடைய செய்தது. எனவே எல்லா வேலைகளையும் பெரும்பாலும் அவர் தனியாகவே தான் செய்தார். மரம் வெட்டுவதற்கோ, சமப்படுத்துவதற்கோ எவ்வித இயந்திர உதவியுமின்றி என் கணவரே செய்தார். அதினால் பல வருட கடின உழைப்பிற்கு பின் தான் உருவாக்க முடிந்தது. தேவன்





ஜலப்பிரளயத்தைக் குறித்த அந்த திட்டத்தை விவரிக்கையில் எங்கள் குமாரர்கள் கூட சிறுபிள்ளைகளாய் தான் இருந்தார்கள். ஆனால் பின் நாட்களில் எங்கள் குமாரர்கள் பெரும் பங்காற்றினார்கள்.

**பத்தி:** நீங்கள் எவ்வாறு உங்கள் கணவருக்கு உதவினீர்கள்?

**நோ.ம:** என் கணவர் ஒவ்வொரு முறை வெளியே சென்று விட்டு வந்து மக்களின் நடக்கையைக் கூறி மனம் வருந்தும் போது அவரை ஆறுதல்படுத்தி, உற்சாகமூட்டும் வார்த்தைகளையே பேசுவேன். பிள்ளைகளைப் பராமரித்து, குடும்ப காரியங்களை என்னால் இயன்ற மட்டும் நானே பார்த்துக் கொள்வேன். எனது அதிகபட்ச ஒத்துழைப்பை எல்லா சூழ்நிலையிலும் தேவ சித்தம் நிறைவேறும்படி என் கணவருக்கு கொடுத்ததோடு, இரவு பகலாக பரத்திலிருந்து தேவ ஒத்தாசை அவருக்கு கொடுக்கப்படும்படி மன்றாடி கொண்டேயிருப்பேன்.

**பத்தி:** ஒவ்வொரு ஆணின் வெற்றிக்கு பின் ஒரு பெண் இருப்பாள் என்ற கூற்றின்படியே வாழ்ந்து இருக்கிறீர்கள். சரி அம்மா, விலங்குகள் அவற்றின் இருப்பிடம், உணவு பழக்கவழக்கங்கள் பற்றி முன்னமே உங்களுக்குத் தெரியுமா?

**நோ.ம:** இல்லை தம்பி, தேவன் விலங்குகள், பறவைகள், ஊரும் பிராணிகளை உயிரோடே காக்கும்படி பேழைக்குள் சேர்த்துக் கொள் என்ற கட்டளையை தேவன் கொடுத்த பின்தான் அவைகளின் இருப்பிடம் தேடிச் சென்று அவற்றின் உணவு முறைகள், பழக்க வழக்கங்கள் போன்றவற்றை ஆராய்ந்தோம். என் கணவர் மரவெட்டு வேலையினால் கைகள் சோர்ந்து போகும் போது, சிறிது ஒய்வெடுப்பார். பின் விலங்குகள் இருப்பிடம் தேடிச் சென்று சற்று மறைவாக அமர்ந்துக் கொள்வார். பல மணி நேரம் அவைகளை கவனித்துக் கொண்டிருப்பார். பின்னர் அதன் விருப்ப உணவுகளைக் கொண்டு வந்து கூடாரத்தில் சேர்த்து வைப்பார். இவ்வாறு பல நாட்கள், மாதங்கள், வருடங்களாக விலங்கு மற்றும் பறவை இனங்களையும் கவனித்த பின்னரே, இட வசதி கருதி அதினதின் குட்டிகளையே சுத்தமில்லாத விலங்குகளில் ஒவ்வொரு ஜோடியும், சுத்தமானவைகளில் ஏழு ஜோடியும் கர்த்தரின் கட்டளைபடி பேழையினுள் சேர்த்துக் கொண்டோம். சுத்தமானவைகளில் சிலவற்றை ஜலப்பிரளயம் முடிந்த பின் கர்த்தருக்கு தகனபலி செலுத்த உபயோகித்தோம்.

**பத்தி:** உண்மையிலேயே உங்கள் கணவரும் நீங்களும் பாராட்டுக்குரியவர்கள் தான். அம்மா, 5 மாதங்கள் பேழைக்குள் பல வகையான விலங்குகள், பறவைகளோடு உங்கள் அனுபவம் எப்படி இருந்தது?

**நோ.ம:** பறவைகளின் ஓசைகள், விலங்குகளின் அச்சுறுத்தும் உறுமல்கள் முதல் சில நாட்கள் உறங்க முடியவில்லை. இடி மின்னலின் போதும், தண்ணீரின் அளவு கூடி, பேழை அசையத் துவங்கிய போதும் விலங்குகள் மற்றும் பறவைகள் அச்சத்தால் அலறின; எங்களுக்கும் பயமாகவும், கலக்கமாகவுமே இருந்தது. நாட்கள் செல்ல செல்ல நாங்களும் பழகி விட்டோம். ஜீவ ராசிகளும் பழகி விட்டன. பேழையினுள் தானியங்கள், உணவு பொருட்கள் சேமித்து வைக்கும் அறையில் இருந்து உணவுப் பொருட்களை எடுத்து அந்தந்த ஜீவராசிகளுக்கு ஏற்ற உணவளிப்பது, முட்டையிடும் பறவைகளின் முட்டைகளை சேகரிப்பது, பால் தரும் விலங்குகளில் பால் கறப்பது, ஜீவராசிகளின் இயற்கை கடன்கள் மற்றும் இருப்பிடத்தை சுத்தம் செய்வதிலேயே நேரம் கடந்து விடும்.

**பத்தி:** அப்பப்பா... 5 மாதங்கள் இவ்வளவு பாடுகளையும் சகித்துக் கொண்டு எப்படி உள்ளே இருந்தீர்கள்?

**நோ.ம:** தம்பி, தேவ திட்டம் நிறைவேறுகிறது என்ற மன நிறைவு எங்களுக்கு மகிழ்ச்சியையே தந்தது. எனவே நானும் எனது மருமக்களும் முகம் சுழிக்கவோ, குறை சொல்லவோ இல்லை.

**பத்தி:** சூப்பர் அம்மா! உங்களைப் போல் எல்லா ஸ்திரீகளும் மற்றவர்களுக்கு முன் மாதிரியாய், பொறுமையாய், தாழ்மையாய், கணவருக்கு கீழ்ப்படிந்து, தேவ பயத்தோடு, பொறுப்புணர்ச்சியோடு, சகிப்புத் தன்மையோடு இருந்து விட்டால் ஒவ்வொரு இல்லமும் குட்டி பரலோகம் தான். அம்மா... உங்களோடு பேசிக் கொண்டே இருந்ததில் நேரம் போனதே தெரியவில்லை. சரிம்மா, எங்கள் வலிபர் உலகம் செல்லப் பிள்ளைகளுக்கு நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

**நோ.ம:** அன்புச் செல்லங்களே, நீங்கள் யாராயிருந்தாலும் 'இயேசு கிறிஸ்து' என்னும் பேழைக்குள் குடும்பமாக வந்து விடுங்கள். எப்பேர்பட்ட மழையோ, பெருவெள்ளமோ, கொரோனா போன்ற கொள்ளை நோயோ, இயற்கை சீற்றங்களோ உங்களைத் தொடவோ அழிக்கவோ முடியாது. நன்றி, விடைபெறுகிறேன்.



**பத்தி:** நன்றி அம்மா!

# செய்திகள்!

## பாகிஸ்தானில் 50 ஆண்டுகளில் இல்லாத அளவு பணவீக்கம்!

## உணவு விநியோக மையங்களில் கூட்டநெரிசலில் சிக்கி 20 பேர் பலி!




பாகிஸ்தானின் பணவீக்க விகிதம் கடந்த 50 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு உயர்ந்துள்ளது. உணவு விநியோக கடைகளில் அலைமோதிய கூட்ட நெரிசலில் சிக்கி இதுவரை 20 பேர் பலியாகி விட்டனர்.

பாகிஸ்தான் பல்வேறு காரணங்களால் நிதி நெருக்கடியில் சிக்கி தவித்து வருகிறது. இதனால் உணவு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால் அரிசி, கோதுமை, பால் உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்கள் கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

உற்பத்தியும், இறக்குமதியும் குறைந்துள்ளதால் பண வீக்க விகிதம் தொடர்ந்து உயர்ந்து கொண்டே வருவதால் உணவுப் பொருட்கள் மட்டுமல்லாது அனைத்தின் விலையும் கடுமையாக அதிகரித்துள்ளது. பாகிஸ்தான் பணவீக்கம் குறித்து அந்நாட்டின் முதலீட்டு நிறுவனமான ஆரிப் ஹபிப் கார்ப்பரேஷன் வெளியிட்ட அறிக்கையின்படி, பாகிஸ்தானின் மார்ச் மாத நுகர்வோர் விலை குறியீட்டு எண் 35.37 சதவீதமாக உள்ளது. கடந்த 50 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு இது மிகவும் உயர்ந்துள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. இது கடந்த பிப்ரவரி மாதத்தில் 31.60 சதவீதமாகவும், ஜனவரியில் 27.60 சதவீதமாகவும் இருந்தது. அதேசமயம் மாதாந்திர பணவீக்கம் 3.72 சதவீதமாக உள்ளது. கடந்த ஆண்டில் மொத்த பணவீக்க விகிதம் 27.26 சதவீதமாக காணப்பட்டது.

உணவுப் பொருட்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ள நிலையில், ரமலான் நோன்பு தொடங்கியுள்ளது. இதையொட்டி பல இடங்களில் தொண்டு நிறுவனங்கள் மூலம் விநியோகிக்கப்பட்ட உணவுப் பொருட்களை வாங்க ஒரே சமயத்தில் மக்கள் குவிந்தனர். அப்போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 20 பேர் பலியாகி விட்டனர்.

இதனிடையே, பணியாளர்களுக்கு சம்பளம் தர முடியாமல் செல்போன் உற்பத்தி நிறுவனங்கள் மூடப்படும் நிலையில் உள்ளன. இதனால் சுமார் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பணியாளர்களும், அவர்களின் குடும்பங்களும் பாதிக்கப்படும் ஆபத்து ஏற்பட்டுள்ளது

– தினகரன், 3 ஏப்ரல் 2023.

## எதிரிகளின் போர்க்கப்பல்களை அழிப்பதற்கு, கடலுக்கு அடியில் மீண்டும் அணு ஆயுத டிரோன் சோதனை!



வடகொரியா கடலுக்கு அடியில் பயணித்து எதிரி கப்பல்கள் மற்றும் துறைமுகங்களை அழிக்கும் வகையிலான அணு ஆயுத டிரோன் சோதனையை வெற்றிகரமாக நடத்தி உள்ளதாக அறிவித்துள்ளது.

அமெரிக்காவும், தென் கொரியாவும் இணைந்து கடந்த சில நாட்களாக தொடர்ந்து கூட்டு ராணுவ பயிற்சியில் ஈடுபட்டுள்ளன. இதற்கு வடகொரியா கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றது. இதற்கு பதிலடி தரும் வகையில் பல்வேறு ஏவுகணைகளையும் அவ்வப்போது சோதனை செய்து வருகின்றது. அண்டை நாடுகளை அச்சுறுத்தும் வகையில் அணு ஆயுத சோதனையையும் வடகொரியா நடத்தி வருகின்றது. இதன் தொடர்ச்சியாக நேற்று கடலுக்கு அடியில் டிரோன் மூலமாக அணு ஆயுத சோதனை நடத்தியதாக வடகொரியா அறிவித்துள்ளது. கடலுக்கு அடியில் சென்று தாக்கும் திறன் கொண்ட இந்த அணு ஆயுத டிரோன் சோதனைக்கு ஹெயில் -2 என பெயரிடப்பட்டுள்ளது. இந்த சோதனையில் டிரோனாது சுமார் 71 மணி நேரத்துக்கும் மேலாக நீருக்கு அடியில் பயணித்து கிழக்கு துறைமுக நகரமான டான்சோன் அருகே கடலில் போலி போர்கப்பலை வெற்றிகரமாக வெடிக்க செய்துள்ளதாக வடகொரியாவின் அதிகாரப்பூர்வ செய்தி நிறுவனம் அறிவித்துள்ளது. இந்த டிரோன் சோதனை மூலமாக, கடலில் 1000கி.மீ. தொலைவில் உள்ள இலக்குகள் மீதும் அபாயகரமான தாக்குதல் நடத்தும் திறன் உள்ளது என்பதை வடகொரியா நிரூபித்துள்ளது.

முன்னதாக கடந்த மாதம் வடகொரியா ஹெய்ல் 1 என்று பெயரிடப்பட்ட அணு ஆயுத ட்ரோன் சோதனையை நடத்தியதாக அறிவித்தது. இந்த ஹெய்ல் 1 டிரோனானது செயற்கை சுனாமியை உருவாக்கும் தன்மை கொண்டது என்றும் குறிப்பிட்டு இருந்தது. ஆனால் வடகொரியாவின் இந்த அச்சுறுத்தல் மிகைப்படுத்தப்பட்டது எனநம்புவதாக தென்கொரியா ராணுவம் விமர்சித்துள்ளது

**- தினகரன், 9 மார்ச் 2023.**

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211




# அன்னையர் தினம்

மே - 14, 2023



அமெரிக்காவை சேர்ந்த அன்னா மேரி ஜார்விஸ் என்பவர் அன்னையர் தினத்தை நிறுவினார். அவருடைய தாய் அவர்கள் வாழ்ந்து வந்த பகுதியில், 'மதர்ஸ் டே வொர்க்' என்ற கிளப்பை நிறுவி அதன்மூலம் அந்தப் பகுதியிலுள்ள கிராமங்களின் சுத்தம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்த பாடுபட்டு வந்தார். அமெரிக்கன் சிவில் போரில் காயமடைந்தவர்களுக்கு மருந்தளித்தும் சிகிச்சையளித்தும் வந்தார். அவர் 1905ஆம் ஆண்டு இறந்துவிடவே, தாயின் அன்பை நினைவுகூரும் வண்ணமாக 1914ஆம் ஆண்டு முதல் மே மாதம் இரண்டாவது ஞாயிற்றுக் கிழமை அன்னையர் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

**பல ஆயிரங்கள் செலவு செய்து பரிசுப் பொருட்களை வாங்கி தாயாருக்கு கொடுத்து தான் அன்னையர் தினத்தை கொண்டாட வேண்டும் என்று அவசியமில்லை. மாறாக,**

- சிறுவயதிலிருந்தே பள்ளிக்கூடம், கல்லூரி, வேலை, திருமணம் என ஒவ்வொரு நாளும் நமக்காக உழைத்துக் கொண்டே இருக்கும் நமக்கு, அம்மாவின் அன்பை நினைத்துப் பார்க்க நேரமில்லை. அன்னையர் தினத்தன்று
- அவற்றை நினைத்துப் பார்த்து, அந்த ஒரு நாளையாவது உங்கள் அம்மாவுடன் சந்தோசமாக

செலவழிக்கலாமே ...

- அன்று ஒரு நாளாவது நம்முடைய வேலைகள், பொழுதுபோக்குகளை ஒதுக்கி வைத்துவிட்டு அம்மாவிற்கு தேவையான உதவிகளை செய்து கொடுக்கலாமே...

- குடும்ப நிர்வாகத்தையும், குடும்பத்தினரின் நலனையும் தவிர வேறு எதையுமே யோசிக்காத தாய்க்கு மாதத்தில் ஒரு நாளாவது முழு ஓய்வு கொடுத்து அவர்களுக்குப் பிடித்த செயல்களில் ஈடுபடுத்தலாமே...

- உடல்நலக் குறைவு ஏற்பட்டு சோர்ந்து போனாலும் நமது பசியைத் தீர்ப்பதற்காக அடுப்படியில் நின்று சமைத்து தரும் அவர்களுடைய சமையலை மனதார பாராட்டலாமே...

- அவர்களுடைய உடன்பிறப்புகள், தோழிகளை வீட்டிற்கு வரவழைத்து அவர்களோடு ஒருநாளை செலவழிக்க வைக்கலாமே...

**வாழ்நாள் முழுவதும் நம் தாய் நமக்காக செய்த தியாகங்களை நமக்கு நினைவூட்டும் நாளாக அன்னையர் தினம் அமைகிறது. எனவே இந்த ஆண்டு நீங்கள் எவ்வளவு பிஸியாக இருந்தாலும் சிறிது நேரம் ஒதுக்கி உங்கள் அம்மா செய்த அனைத்திற்கும் நன்றி சொல்லுங்கள்! உங்கள் தாய் மகிழ்ச்சி அடைவார்கள்!!**

**என் மகனே, உன் தகப்பன் கற்பனையைக் காத்துக்கொள்; உன் தாயின் போதகத்தைத் தள்ளாதே. நீதி 6:20**
**...உன் தாய் வயதுசென்றவளாகும்போது அவளை அசட்டைபண்ணாதே - நீதி 23:22.**

Registered with Registered News Paper of India No: TNBIL/2010/32847
Postal Registration No: TTN/26/2023-2025.
Date of Publication: 25 – 04 -2023
Date of Posting: 28th to 30th of every month.
Office of Posting: BPC, Thoothukudi HPO – 628 001.
Licensed to Post Without Prepayment No: TN/WPP-108/SR/2023-2025.

# வாலிபர் எழுப்புதல் கூடுகை

## இராணிப்பேட்டில்...

**மே 13,**
சனிக்கிழமை

நேரம்:
மாலை 5 மணி முதல்
7 மணி வரை

இடம்: **வல்லமையின் ஜெபகூடாரம், வானப்பாடி**

*செய்தியும் ஜெபமும்:* **சகோ. சதீஷ் குமார்**

தொடர்புக்கு: 9791295663 I 9500283179

## வேலூரில்...

**மே 14,**
ஞாயிற்றுக் கிழமை

நேரம்:
மாலை 4 மணி முதல்
7 மணி வரை

இடம்: **கெத்சமனே ஜெப மையம்**
அஜந்தா மஹால், கழிஞ்சூர், காந்தி நகர் மேற்கு

*செய்தியும் ஜெபமும்:* **சகோ. சதீஷ் குமார்**

தொடர்புக்கு: 9442979556 I 9786379556

## அரக்கோணத்தில்...

**மே 28,**
ஞாயிற்றுக்கிழமை

நேரம்:
மாலை 3 மணி முதல்
6 மணி வரை

இடம்: **பெத்தேல் ஜெப வீடு,**
ரயில்வே ஸ்டேஷன் ரோடு, S.R. Gate.

*செய்தியும் ஜெபமும்:* **சகோ. காலேப்**

தொடர்புக்கு: 97905 48057

## பாண்டிச்சேரியில்...

**மே 28,**
ஞாயிற்றுக் கிழமை

நேரம்:
மாலை 4 மணி முதல்
7 மணி வரை

இடம்: **கெத்சமனே ஜெப மையம்,**
கொட்டு பாளையம், லாஸ்பேட்டை
லதா ஸ்டீல் எதிரில், ECR ரோடு

*செய்தியும் ஜெபமும்:* **சகோ. சதீஷ் குமார்**

தொடர்புக்கு: 8344433800 I 9442885315

## விழுப்புரத்தில்...

**மே 29,**
திங்கட்கிழமை

நேரம்:
காலை 9 மணி முதல்
1 மணி வரை

இடம்: **கெத்சமனே ஜெப மையம்,**
H.H.complex, முதல் மாடி
நம்நாடு டெக்ஸ்டைல்ஸ் எதிர்புறம், சாந்தி தியேட்டர் ரோடு

*செய்தியும் ஜெபமும்:* **சகோ. சதீஷ் குமார்**

தொடர்புக்கு: 8870517324 I 9442885315

